# குமரி மலர்

பதிப்பாசிரியர்


ஏ. கே. செட்டியார்

50 காசு


செழிப்பு மிக்க
புத்தாண்டு சார்வரிக்கு
வாழ்த்துக்களுடன்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ஆடைகள்
உங்கள் ஆடைக்கும்
இதர பல அலங்காரங்கட்கும்
சென்னை ராஜ்ய
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம்
லிமிடெட்.
பாந்தியன் ரோடு
சென்னை-8.
SISTA'S

3422


சுவர்ண மாளிகை




P.A. ராஜு செட்டியார் & பிரதர்

கோயமுத்தூர்

P-1-49

# ANNOUNCEMENT.



## "TEXTOOL"

**TAKES PRIDE TO ANNOUNCE THAT THEIR 4 CYLINDER 36 To 86 H. P. AUTOMOTIVE DIESEL ENGINES**

will be out in the market Soon!!
Await Further News !!!

MANUFACTURERS:-


**Textool Company Limited,**

**Post Box No. 221,**

COIMBATORE.

**Phone: 409 1409**

**Gram: 'TEXTOLCO'**




VUMMIDI
RAMIAH CHETTY
GURUSWAMY CHETTY & CO.
JEWELLERS
23-25, CHINA BAZAAR ROAD
MADRAS

**Branch :**

**L. I. C. BUILDING**
**Mount Road, : MADRAS-2**

## லிங்கம் கம்பெனியாரின்

# ரோஜா மார்க் நெய்

- இது விஞ்ஞான முறைப்படி அசல் புத்தம் புதிய வெண்ணெயிலிருந்து தயாரிக்கப்பெற்றது.
- பூர்த்தியாக அமைக்கப்பெற்ற எங்கள் சொந்த ரசாயன சாலையில், விஞ்ஞானப் பட்டம் பெற்று இந்திய சர்க்கார் மத்திய கண்ட்ரோல் லாபரட்டரியில் நெய்க் கலையில், விசேஷமாகத் தீவிரமாகக் கற்றவரால் பரிசோதிக்கப் பெறுகிறது. தரத்துக்கு வந்த சரக்குகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு, வராதவைகளைத் தள்ளுபடி செய்யப்பெற்று விடுகிறது.
- இந்திய சர்க்காரால் நிர்ணயிக்கப் பெற்ற தர எண்களை உடையது.
- நல்ல குரணை மணம் நீண்ட நாட்கள் வாசனை கெடாமல் இருக்கும்.
- "AGMARK" நெய்யும் கிடைக்கும்.
- எல்லா நம்பகமுள்ள வியாபாரிகளிடம் சீல் செய்த 1 பவுண்டு, 2 பவுண்டு, 9 பவுண்டு மற்றும் 36 பவுண்டு டின்களில் கிடைக்கும்.
- விட்டமின் 'A' இயற்கையாகவே இருக்கிறது (Synthetic) அல்ல.

தயாரிப்பாளர்கள் :

**LINGAM & CO.,**

**COIMBATORE**

மலர் 17 இதழ் 1

சார்வரி—சித்திரை

# உள்ளுறை

பக்கம்

1. நமது உடம்பின் தன்மை 6
—காந்தியடிகள்

2. இத்தாலியில் ஒரு விநோபா பாவே 10
—பி. ஈசுவரமூர்த்தி

3. பிரிட்டனில் வெளிநாட்டு மாணவர்கள் 17

4. ஐரோப்பாவின் மிகப் பெரிய துறைமுகம் 20

5. இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே 25

6. கொய்த மலர்கள் 29

7. கடலாதிக்க உரிமை 39

8. மலிவுப் புத்தகங்கள் 42

9. ஜெட் விமானிகள் பயிற்சி 44

10. எலும்புச் சேமிப்பு நிலையம் 48

11. ஜெர்மனியில் தென்னிந்திய மொழி ஆராய்ச்சி 51

12. பிரிட்டிஷ் கயானா 58

13. அமெரிக்காவும் இந்தியாவும் 60

14. தாமஸ் ஜெபர்ஸன் 73

15. பெண்குவின் பறவைகள் 78

# நமது உடம்பின் தன்மை

**காந்தியடிகள்**

ஆரோக்கியம் உள்ளவன் என்பதற்கு அடையாளம் தினசரிக் கடமைகளைச் செய்வதில் உடலில் சோர்வு ஏற்படக் கூடாது. தினம் சுமார் பத்து மைல் தூரம் நடக்கவும், உடலால் செய்யவேண்டிய காரியங்களைச் சரிவரச் செய்யவும் இயலவேண்டும். ஆரோக்கியமுள்ளவன் எளிய உணவை உண்டு அதை இலகுவில் ஜீரணிப்பான். அவனுடைய மனமும், கண், நாக்கு முதலிய பொறிகளும் அமைதியுடன் இயங்கும்.

பல பயில்வான்களுக்கு மேலே சொன்ன லட்சணங்கள் அமைவதில்லை. அவர்களுடைய தசைகள் வலுப்பெற்றிருக்கும்; ஆனால் வேறு அம்சங்களில் உடலில் பல கோளாறுகள் இருக்கும். உடல் பலம் என்பது வேறு; ஆரோக்கியம் என்பது வேறு. உடலை ஆரோக்கியமான நிலையில் கொண்டு செலுத்த நமக்கு உடம்பைப் பற்றி நுண்ணிய ஆராய்ச்சி வேண்டும். இந்த ஆராய்ச்சியைத் தினசரி வாழ்க்கையில் பயன் படுத்துவதால், மனமும் பொறிகளும் லாகவமாகவும் திறமையாகவும் வேலை செய்ய வேண்டும். அதுதான் ஆரோக்கியத்துக்கு அடையாளம்.

நமது உடம்பு மண், நீர், காற்று, தீ, ஆகாசம் என்ற பஞ்ச பூதங்களால் ஆனதென்று தொன்றுதொட்டே நமக்குத் தெரியும்.

கால், கை, வாய், மலஜல துவாரங்கள் ஆகிய ஐந்தும் கர்மேந்திரியங்கள். ஸ்பரிச உணர்ச்சிக்கு ஆதர

வான உடம்பின்மேல் சருமம், வாசனையறிய உதவும் பொறியாகிய மூக்கு, ருசிக்கு ஆதாரமான நாக்கு, பார்வைக்கு ஆதாரமான கண், கேள்விக்கு ஆதாரமான காது ஆகிய ஐந்தும் ஞானேந்திரியங்கள். சிந்தனைக்கு ஆதாரமான மனத்தைப் பதினோராவது இந்திரியம் என்பார்கள். முதலில் கூறிய பத்துப் பொறிகளின்மூலம்தான் மனம் நமக்கான காரியங்களைச் செய்து தருகின்றது. இந்தப் பொறிகளும் மனமும் இசைந்து இயங்கினால், நாம் ஆரோக்கியமுள்ளவர்களாவோம்.

மனித உடம்பின் உள் நுட்பம் மிகவும் விசித்திரமானது. அண்டத்திலுள்ளதெல்லாம் இந்தப் பிண்டத்தில் உள்ளது; இதில் இல்லாதது அண்டத்தில் இல்லை. நமது உடம்பைப் பற்றி நமக்குப் பூரணமாகத் தெரிந்துவிட்டால், பிரபஞ்சத்தைப் பற்றியும் நமக்கு முழுதும் தெரியும். ஆனால் வைத்திய நிபுணர்களுக்குக்கூட நமது உடம்பின் நுட்பங்கள் முழுவதும் தெரியாது. அப்படியிருக்க, நம்மைப் போன்ற பாமரர்களுக்குத் தெரிந்தது மிகவும் கொஞ்சம் என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. மனத்தின் நுட்பங்களை அளக்கவும் இதுவரை ஒருவரும் உபாயம் கண்டு பிடித்ததில்லை. உடம்புக்கு உள்ளேயும் வெளியிலும் நடக்கும் காரியங்களைப்பற்றி விவரமாகச் சொல்லும் திறமையுடையவர்கள்கூட, உடம்பு எப்படி இயங்குகிறது என்று சொல்ல முடிவதில்லை. சாவின் தன்மை தெரிந்து, அது எப்போது ஏற்படும், ஏன் ஏற்படுகிறது என்று சொல்ல வல்லவர்கள் ஒருவருமே யில்லை. இதுபோலவே மிகவும் அடிப்படையான பல விஷயங்கள் நமக்குத் தெரியாது. அனுபவமும் நூலறிவும் எவ்வளவு இருந்தாலும், நமக்குத் தெரிந்தது கடுகளவு; தெரியாதது உலகளவு என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

நமது உடம்பு இனிமையாகத் தொழில்பட வேண்டு மானல், அதன் ஒவ்வொரு அங்கமும் இசைந்து வேலை செய்ய வேண்டும். முக்கியமான அங்கம் ஒன்று இடர் உற்ருலும், உடம்பின் வேலை முழுவதும் ஸ்தம்பித்து விடுகிறது. உதாரணமாக, அஜீர்ணம் ஏற்பட்டால் உடல் முழுதும் தளர்வுறும். அஜீர்ணம், மலச்சிக்கல் ஆகியவற் றைக் குறைகள் எனக் கருதாமல் அசட்டை செய்பவ னுக்கு ஆரோக்கிய விதிகளின் நுட்பமே தெரியாது என்று சொல்லிவிடலாம். கணக்கில்லாத நோய்களுக்கு இந்த இரண்டும்தான் மூலகாரணங்கள்.

நமது உடம்பால் என்ன பயன் என்பதை இப்போது ஆராய்வோம். உடம்பு ஒரு நுட்பமான கருவி. மற்றக் கருவிகளைப் போலவே அதை நன்கு பயன்படுத்தவும் செய்யலாம், தவருகவும் உபயோகிக்கலாம். சுயநலத் தைப் பெரிதாகக் கருதி மற்றவர்களுக்குத் தீங்கு செய் யவோ அல்லது களியாட்டங்களில் ஈடுபடவோ உடம் பைப் பயன்படுத்திஞல், அது தவருன உபயோகமாகும். உலகத்தின் நலன் கருதிச் சேவையில் உடம்பை இடை விடாது பயன்படுத்திஞல் அது நல்ல உபயோகம். நாம் கடவுளின் அம்சம்; அதாவது. நமது ஆத்மா பரம்—ஆத் மாவின் ஒரு பகுதி. இந்த உணர்வு பெறுவதற்காக நாம் எப்போதும், எந்தக் காரியத்திலும் ஒருமுகமாக முயன்று கொண்டே வந்தால், நமது உடம்பானது ஆத்மா உறை வதற்கான திருக்கோயிலாகிறது. அப்போது அங்கே நோய்க்கு இடமில்லை.

நமது உடம்பை ஓர் அழுக்குப் பாண்டமாகச் சொல் லுவதுண்டு, இது உண்மைதான். ஆனல் அது இனிமை யாகவும் சுத்தமாகவும் இயங்க நாம் உதவ வேண்டும். பொன்னும் மணியும் மண்ணுக்குள் கிடக்கும்போது,

அழுக்குப் படிந்துதான் இருக்கின்றன. ஆனால் அதன் மதிப்பை உணர்ந்தவர்கள், கோடிக்கணக்கான பொருளை யும் சாஸ்திர ஆராய்ச்சியையும் உபயோகித்துப் பண் படுத்திப் பயனடைகிறார்கள். ஆத்மா பொன்னையும் மணியையும் விடச் சிறந்தது. அதன் உறைவிடமாகிய உடம்பை நாம் எவ்வளவு கவனத்துடன் போற்ற வேண்டும்.

உலகத்தில் முன்கூட்டி வாங்கிய கடனைத் தீர்க்கவே நாம் எல்லோரும் பிறப்பு எடுத்திருக்கிறோம். ஆகையால் கடவுளுக்கும் அவர் படைத்த உயிர்களுக்கும் சேவை செய்வதுதான் இப்பிறப்பின் நோக்கமாக இருக்க முடி யும். உடம்புக்கு நாம் தர்மகர்த்தா என நினைத்து, அதைச் சிரத்தையுடன் பாதுகாக்க வேண்டும்; நம்மால் கூடுமான அளவுக்குச் சேவை செய்ய உதவும் நிலையில் அதை வைத் துக் கொண்டிருப்பது நமது கடமை. ஆரோக்கியமான உடம்பும், மனமும் சேவைக்கு இன்றியமையாத முதற் கருவிகள்; இவைதான் ஆத்ம அனுபவத்துக்கு ஆதாரம்.

# இத்தாலியில் ஒரு விநோபா பாவே

**பி. ஈசுவரமூர்த்தி**

இத்தாலி, ஐரோப்பிய நாடுகளில் பொருளாதார வளத்தில் மிகவும் பின்தங்கியது. வடக்கு இத்தாலி பொருளாதார மேம்பாடு உடையது. ஆனல் தென் இத்தாலி விவசாயத்தாலேயே வாழவேண்டி இருப்பதாலும், வேறு தொழில்கள் வளராததால் மக்கள் தொகை நிலத்தில் அதிகமாகி விட்டதாலும், நாளும் நாளும் வாழ்க்கை வசதிகளில் பின் தங்கி வருகிறது. ஆனல் தென் இத்தாலியின் சில தீவுகளான சிசிலி முதலிய இடங்களில் நாம் நம்பமுடியாத அளவுக்கு வறுமையும், பிணியும் இத்தாலிய மக்களைப் பாதித்து வருகின்றன. சிசிலித் தீவின் மேற்குப் பகுதியில் வறுமையின் கொடுமைக்கு அளவில்லை. இங்கே உள்ள மக்கள் வறுமை மிகுதியால் கொலைகள் செய்து குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டி உள்ளது. அரசாங்கச் சட்டத்தை விட்டுத் தப்பிக்க கொலைகாரர்கள் ஒளிந்து வாழ வேண்டி உள்ளது. அறியாமையும் பல கொடுமைகளை மக்களுக்கு அளித்து விட்டது. இவர்கள் கிறிஸ்துவின் பிறந்த தினத்தன்று புழுக்களை உணவாக உட்கொள்கிருர்களாம். இதன் காரணம் புழுக்கள் மனிதர்கள் உண்ணும் உணவை செரிக்கச் செய்கின்றனவாம். ஆண்கள் ஆண்டின் பெரும் பகுதி நாட்கள் வேலை செய்வதில்லையாம். பெண்களோ வீட்டை விட்டு வெளியே செல்வதில்லையாம். இதன் காரணம் பெண்

கள் வீட்டைவிட்டு வெளியே செல்வது ஒழுக்கக்கேடு என்ற நம்பிக்கையாம். மேலும், இவர்கள் வாழ்வதே வெளி உலகத்துக்கு அதிகம் தெரியாதாம். தொழிலாளர் நலன் காங்கிரஸ் தலைவர்கள் பலரை சுமார் 30 பேர்களை இம் மக்கள் கொன்று விட்டார்களாம்! அதாவது இவர்கள் ஆண்டவன் சொன்ன வழி அவரவர்கள் தொழிலைப் பார்க்காது வேறு மக்களின் தொழிலை பாதித்தார்களாம்! முடியரசுக்கு இவர்கள் முழுச் சம்மதத்தோடு செல்வாக்கு அளிக்கிறார்களாம். ஏதொரு சோஷலிச அரசியல் கட்சியையும் இவர்கள் நம்புவதில்லையாம். ஏனென்றால், இம்மக்கள் மனத்தில் முடியரசுக்கு சாதகமாக இருப்பது இவர்களுடைய முன்னோர்களுக்கு புண்ணியார்ச்சனை செய்வதற்கு அடையாளமாகப் படுகிறதாம். மக்கள் தொகைப் பெருக்கம் மட்டுமல்ல; பிறந்த குழந்தைகள் ஒவ்வொரு ஆயிரத்திலும் சுமார் நூறு இறந்து விடுகின்றனவாம். நோய்வந்தால் டாக்டர் யாரையும் அழைப்பதில்லையாம். ஏன் என்றால் இது பண விரயமான ஒரு காரியமாம்!

இத்தகைய வறுமையும், மூடப் பழக்க வழக்கங்களும் நிறைந்த இந்தச் சமூகத்தை திருத்த வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு இப்போது உலகம் அறியச் சேவை செய்து வருபவர்தான் இத்தாலியின் விநோபாபாவேயான டானிலோ டோல்சி. இவர் சமீபத்தில் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலைக்கு வந்திருந்தார். இவருடைய கதைகளும், சேவை மனப்பான்மையும் நமது நாட்டு விநோபா பாவேயின் தொண்டையே நினைவூட்டுவனவாக உள்ளன. இவரோ படித்துப் பட்டங்கள் பல பெற்ற அறிஞர். ஆனால் மக்களின் கொடுமை மிக்க பரிதாப நிலையைக் கண்டு துடித்து எழுந்தார். எல்லாச் சொத்துச் சுகங்களையும் தியாகம் செய்து விட்டுத் தனது

ஒரே நோக்கம் இந்த மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு அளிப்பது என்று பணி செய்து வருகிறார். இவருடைய சிந்தனைகளில் உலகம் புரிந்து கொள்ளும் நிறைந்த மனிதாபிமானம் உள்ளது. அங்கே ஆப்பிரிக்காவின் ஒரு கோடியிலே ஆப்பிரிக்க மக்களின் பிணி போக்கத் தொண்டு செய்து வரும் உலகப் பெரியார் ஆல்பெர்ட் ஸ்வைட்ஸரின் நினைவும் வருகிறது அல்லவா? ஒவ்வொரு நாடும் எத்துணை மனிதர்களைப் பெறும் பாக்கியம் பெற்று விளங்குகிறது! ஏன், பொருளாதார வளமும் சமூக வளமும் பெற்று விளங்கும் அமெரிக்காவிலும் நீக்ரோ மக்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளைக் கண்டு சீறி எழுந்த மார்டின் லூதர் கிங் என்ற இளைஞரைச் சந்தித்தபோதும் உலகம் முழுதும் இத்தகைய ஒரு சில நன் மக்கள் இன்றும் வாழ்ந்து வருவதால் நமது மனிதாபிமானம் உலகத்தை ஒரு குடும்பம் ஆக்கப்போகிறது என்ற நினைவை உண்டாக்கியது.

டானிலோ டோல்சி, டிரீஸ்டா என்ற தீவிலே 1924ஆம் ஆண்டு பிறந்தவர். இவருடைய தந்தையார் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தவர். ரோம், மிலான் ஆகிய பட்டணங்களில் சென்று டோல்சி, கட்டிடக் கலை பற்றிப் படித்துப் பட்டம் பெற்றார். உலகப் பெரும்போர் வந்தபோது டோல்சி போரில் சேர மறுத்து விட்டார். இதனால் இவர் சிறை செல்ல வேண்டி நேரிட்டது. போர் முடிந்தபின் இவர் சால்டினி என்ற ஒரு சமயத் தொண்டரோடு அனாதைக் குழந்தைகளைப் பரிமாணிக்கும் ஓர் உதவியில் ஈடுபட்டார். ஆனால் கடவுளை வேண்டுவதாலும், தனிமையில் வாழ்வதாலும் வறுமையைப் போக்க முடியாது என்பதை இவர் உணர்ந்து விட்டார். இதை நினைத்துத் தான் 1952ஆம் ஆண்டில் டிராப்பெடோ என்ற கிராமத்துக்குச் சென்று அங்கே

தனது முதன் முதலான சீர்த்திருத்த வேலையைத் தொடங்கினர். இந்தக் கிராமத்தில்தான் டோல்சியின் தந்தையார் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தாராம். அப்போது உலகத்திலேயே அவர் அறிந்த இடங்களில் இந்தக் கிராமம் தான் மிகவும் வறுமையானது என்று டோல்சிக்குக் கூறினராம். இதை டோல்சி கண்கூடாகக் காண முடிந்ததாம்.

டிராப்பெடோவில், டோல்சி கிராமத்தை ஒரு சர்வே செய்தார். பிச்சை யெடுத்துப் பணம் திரட்டினராம். இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு வீடு அற்ற அனைதைகளுக்கான ஓர் இல்லம் அமைக்கத் தொடங்கினர். சுமார் எண்பது உள்ளூர் வாசிகளை இவர் ஒன்ருகச் சேர்த்து இந்தப் பணியைச் செய்து முடித்தார். இந்த இல்லத்துக்கு முதன் முதலில் குடிவந்த ஒரு குடும்பததில் குழந்தைகள் வறுமையால் உயிர் நீத்தனவாம். வேலை இல்லாதோரையும் முழு நேர வேலை செய்யாதவர்களையும் ஒன்று சேர்த்து இந்தக் கிராமத்துக்கு ஒரு ரோடு அமைக்க முற்பட்டாரரம். இந்த வேலை முடிந்தவுடன் அயாடா என்ற அந்தக் கிராமத்து நதியை தாக்கி அணையாக்க முற்பட்டாராம். நதியைக் குறுக்காட்டி தண்ணீரை வயல்களுக்குப் பாய்ச்ச முடியும் என்ற யோசனையை அந்த மக்கள் முதலில் நம்பவே இல்லையாம். ஆனல் அந்தத் தண்ணீரால் சிசிலித் தீவில் செழிப்பான பயிர் விளைவித்திருக்கக் முடியும் என்ற யோசனையை அவர்களுக்கு யாருமே இதுவரை சொல்லியதில்லையாம். மேலும் கல்வி கற்ற ஆசிரியர்கள் சிசிலித் தீவில் பலர் வேலை இல்லாது இருந்தார்களாம். ஆனல் கணக்கு எடுத்துப் பார்த்த போது ஒவ்வொரு வேலை இல்லா ஆசிரியருக்கும் சரியாக முப்பது கல்வி பெறமுடியாத குழந்தைகள் இருந்தனராம். ஆனல் சமூகத்தை ஒன்ருகப் பிணைத்து வைக்கும்

முயற்சி இல்லாது போனதே இக்கொடுமைகளுக்குக் காரணமாம். ஆனால் மேலே சொன்ன அணையைக் கட்ட அதிகாரிகளின் உதவியை டோல்சி நாடியபோது, அதிகாரிகள் உதவி செய்ய மறுத்து விட்டார்கள். இதை எதிர்த்து டோல்சி உண்ணாவிரதம் தொடங்கினார். இவருடைய ஏழாவது உண்ணாவிரத நாளன்று, அதிகார வர்க்கம் இவருக்கு ஒத்தாசை செய்ய ஒப்புக்கொண்டதோடு, வேலை இல்லாதோருக்கு வேலை கொடுக்கவும் முயலுவதாக வாக்களித்ததாம். படிப்படியாக ஆஸ்பத்திரி, ரோடு, பள்ளிக்கூடங்கள் இவற்றை டோல்சி இக்கிராமத்தில் நிறுவியுள்ளார். இக்கிராமத்தை அடுத்து உள்ள பார்டினிகோ என்ற இதையும் விடப் பெரிதான கிராமத்துக்குச் சென்று தங்கள் முயற்சிகளைப் பயன் படுத்தினார்களாம். இங்கே கணக்கெடுத்துப் பார்த்ததில் சுமார் 900 குடும்பங்களில் 400 குடும்பங்கள் மிகவும் பரிதாப நிலையில் இருந்தனவாம். 160 குடும்பங்களில் தந்தையர் சிறையிலும், அரசாங்க வாரண்டைத் தப்பியும் வாழ்வதாகத் தெரிந்ததாம். இவர்கள் அனைவரும் மற்ற குடும்பங்களைக் கொள்ளை இட்டும், கொலைகள் செய்துமே தம் குடும்பங்களைக் காப்பாற்ற நேர்ந்ததாம்.

'தன் கையே தனக்கு உதவி' என்ற சுலோகத்தை இவர் பெருமைப் படுத்தியதோடு இந்த விரதத்தை அனைவரும் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை ஊட்டினார் டோல்சி. ஆகவே 1956 ஜனவரியில் சுமார் 700 மக்கள் ஒரு நாள் உண்ணா விரதம் இருந்து தங்கள் விரதத்தை அனைவருக்கும் தெளிவு படுத்த முடிவு செய்தனராம். ஆனால் இதை எதிர்த்து, இத்தாலிய போலீஸ் வாரண்ட் வெளி விட்டதாம். அதோடு டோல்சியையும் அவர் சீடர்களையும் அரசாங்கம் கைது செய்ததாம். ஆனால் டோல்சி, மக்கள் இதைக் கண்டு சட்டத்தை மீறி ஏதும் செய்யக்

கூடாது என்று கேட்டுக் கொண்டாராம். இவருடைய விசாரணை பல மாதங்கள் நடைபெற்றது.

1956 மே மாதம் நடந்த விசாரணையின் போது இவருக்குச் சாதகமாகச் சாட்சி சொன்ன அனைவரையும் தடை செய்து விட்டதாம் போலீஸ். ஆனால் பல இத்தாலியப் பெருந்தலைவர்கள், டோல்சியை ஆதரித்தும், போலீஸ் நடவடிக்கையைக் கண்டித்தும் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விட்டனராம். ஆனால் போலீஸ், டோல்சியின் ஆட்கள் சட்டத்தை மீறி அரசாங்க நிலங்களை அனுபவிக்க முயன்றதாகக் குற்றம் சாட்டியது. இது உண்மைதான் என்று கோர்ட் முடிவு செய்தது. ஒவ்வொரு சத்தியாக்கிரகிக்கும் 50 நாட்கள் சிறைத் தண்டனை அளித்தது அரசாங்கம். ஆனால் டோல்சிமீது இருந்த குற்றச் சாட்டை அரசாங்கம் விட்டுவிட்டது.

இந்த நிகழ்ச்சிகள் டோல்சியின் சேவையை இத்தாலிய மக்கள் அனைவருக்கும் மட்டுமல்லாது, பல ஐரோப்பிய நாடுகளுக்கும் அறிவிக்கக் காரணமாக இருந்தன. உலகத்தின் பல பகுதிகளிலும் டோல்சியின் சேவையை ஆதரித்து உதவ, குழுக்கள் நிறுவப் பெற்றுள்ளன. ஒவ்வொரு நாட்டில் உள்ள குழுவும், ஒவ்வொரு சிசிலிக் கிராமத்து முன்னேற்றத்துக்கும் பண உதவியும், பல பொருள் உதவிகளும் செய்ய ஒத்துக் கொண்டுள்ளன.

1958ஆம் ஆண்டில் டோல்சிக்கு லெனின் சமாதானப் பரிசு அளிக்கப் பெற்றது. இந்தப் பணம் அனைத்தும் சிசிலி மக்களின் முன்னேற்றத்துக்கே டோல்சி அளித்தார். டோல்சி மனித அபிமானம் மிகுந்த பெருமகனார். இவர் திடகாத்திரமான மேனியும், உண்மையைக் கண்கூடாகப் பார்த்துச் சேவை செய்யும் விஞ்ஞான மனமும் கொண்டு விளங்குகிறார்.

இவர் ஆக்ஸ்போர்டில் பேசியபோது தனது சேவையின் முக்கியமான அம்சங்கள் என்ன என்று விளக்கினர். சிசிலித் தீவின் வீழ்ச்சிக்குக் காரணம், இங்கே சமூகம் பழைய கொள்கைகளால் பின் தங்கி விட்டது. சிசிலியின் கிழக்குப் பகுதி கிரேக்க நகரத்தின் கீழே இருப்பதால் இன்னும் முன்னேறி வருகிறது. ஆனல் மேற்குப் பகுதி டுனிசியா, அல்ஜீரியா ஆகிய பகுதிகளின் நாகரிக நிலையைப் பெற்றிருப்பதாலும், மற்ற இத்தாலியப் பகுதிகளோடு தொடர்பற்று இருப்பதாலுமே வீழ்ந்து விட்டது. இங்கே மனிதனுடைய உழைப்புச் சக்தி நிறைய உண்டு; நீர் உண்டு; வளமுள்ள நிலம் உண்டு. ஆனல் இவற்றை ஒன்று சேர்த்து விஞ்ஞான முறையில் பயன் படுத்தும் சிறந்த அறிவு இல்லை. இந்த அறிவைப் பெறவைப்பதே இவருடைய நோக்கம். ஒவ்வொரு கிராமும் கூட்டுறவு முறையில் அதனதன் பொருளாதாரப் பிரச்னைக்காகத் திட்டமிட்டுத் தீர்த்துக் கொள்ளும் நோக்கத்தை மக்களிடையே ஏற்படுத்த வேண்டுமென் பதே டோல்சியின் தொண்டு. அவருடைய அரசியல் நம்பிக்கைகள் பற்றிக் கேட்டபோது, ‘ எனக்கு அரசியல் கட்சிகளில் பிரியம் இல்லை. பத்துக் குழந்தைகள் பசியால் துடிக்கும்போது அவர்களுக்கு இல்லாது எவ்வாறு உண்பது என்ற மனித எண்ணந்தான் இந்தப் பணியைத் தொடங்கத் தூண்டுகோலாக இருந்தது’ என்ருர் டோல்சி. உலக மேதை ஆல்டஸ் ஹக்ஸ்லி இவரைப் பற்றி பேசுகையில் “செயின்ட் பிரான்சிஸ், காந்தி இவர்கள் வழி வந்த இருபதாம் நூற்ருண்டின் பெருமகன்” என்று இவருடைய சேவையைப் பாராட்டி இருக்கிருர்.

# பிரிட்டனில் வெளிநாட்டு மாணவர்கள்

பத்தாண்டுகளுக்கு முன்பு சுமார் நாலாயிரம் வெளிநாட்டு மாணவர்கள் பிரிட்டனில் தங்கியிருந்தார்கள். இன்று 18,588 மாணவர்கள், பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களிலும், தொழிற் கல்லூரிகளிலும் பயின்று கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டு மாணவர்களில் காமன்வெல்த்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கையே அதிகமாகும். காமன்வெல்த் நாடுகளில் கல்வி முன்னேற்றங் காண, பிரிட்டன் பல வழிகளில் உதவி வருகிறது. அண்மையில் தயாரிக்கப்பெற்ற காமன்வெல்த் கல்வி மான்யத்திட்டத்திற்கு சுமார் எட்டுக்கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

காமன்வெல்த் நாடுகளில் பணியாற்ற, பிரிட்டன், ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கில் ஆசிரியர்களையும் கல்வி நிபுணர்களையும் அனுப்பி வருகிறது. பிரிட்டனில் தங்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கு வசதிகள் அளிப்பதை பிரிட்டிஷ் அரசும் மக்களும் சிறந்ததோர் கடமையாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மகிழ்ச்சியும் வசதிகளும் நிறைந்த சூழ்நிலையில் பயின்றால்தான் அறிவு மலரும். எதிர்காலத்தில் பிரதம மந்திரிகளாகவும், சிறந்த ராஜதந்திரிகளாகவும், நீதிமான்களாகவும், தொழில் மேதைகளாகவும் அன்புருவான வைத்தியர்களாவும் சோபிக்கக்கூடிய இளைஞர்கள் எத்தனை பேர்கள் இந்த மாணவர்களிடையே இருப்பார்களோ எவருக்குத் தெரியும்? தம்தம் நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் ஆற்றல்படைத்த இந்த இளைஞர்களை,

கல்வி பயில வந்துள்ள மாணவர்களாகக் கருதாமல், காமன்வெல்த் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அன்பினுல், விருந்தினராக ஏற்று உபசரிப்பதில் பிரிட்டிஷ் மக்கள் அக்கறை காட்டுகிருர்கள். இதனுல் கல்வியைப்பெறுவதுடன் பிரிட்டிஷ் மக்களுடைய வாழ்க்கையைத் தெரிந்து கொள்ளவும் அவர்களுடன் நெருங்கிப் பழகவும், வெளிநாட்டு மாணவர்களுக்கு வாய்ப்புக்கிடைகிறது.

பல்கலைக் கழகங்களிலுமுள்ள மாணவர் சங்கங்களில் முக்கியப் பங்கெடுத்துக்கொள்ள வெளிநாட்டு மாணவர்களுக்கு ஊக்கமளிக்கப்பெறுகிறது. அண்மையில் ஸந்தர்லாந்து டெக்னிகல் கல் லூ ரி மா ண வ ர் க ள், நைரோபியைச் சேர்ந்த மாணவன் ஒருவனைத் தங்கள் சங்கத் தலைவனுகத் தேர்ந்தெடுத்தார்கள்.

கல்லூரிகளுக்கு வெளியிலும் பல்வேறு சமூகநலச் சங்கங்களுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு வெளிநாட்டு மாணவர்களுக்குக் கிடைக்கிறது. ரோட்டரி சங்கம், ரவுண்ட் ரேபிள் சங்கம், கிறிஸ்துவ இளைஞர் சங்கம் தேசீய மாணவர் யூனியன், மாணவர் இயக்க இல்லம், தொழிலாளர் கல்விச் சங்கம், ஓவர்ஸீஸ் லீக், விக்டோரியா லீக், டொமினியன்ஸ் பெலோஷிப் டிரஸ்டு முதலிய சங்கங்கள், வெளிநாட்டு மாணவர்கள் நலனில் அக்கறை காட்டுகின்றன.

• பயிற்சிக்காகப் பிரிட்டனுக்கு செல்கிறவர்களுடைய நலன்களைக் கவனிப்பதை பிரிட்டிஷ் கௌன்சில் முதற் பணியாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் கௌன்சிலின் பிரதிநிதி, விமான நிலையத்தில் அல்லது ரெயில் நிலையத்தில், மாணவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு

தங்கும் வசதிகளைச் செய்து தருவார். பிறகு நாட்டின் எந்த எந்தப் பகுதிகளில் அவர்கள் பயிலச் செல்கிறார் களோ அந்த அந்தப் பகுதிகளிலுள்ள கிளை நிலையங் களுக்குத் தெரிவித்து அவர்களுடைய வசதிகளைக் கவனித்துக் கொள்ள ஏற்பாடு செய்வார்.

பிரிட்டிஷ் கௌன்சிலுக்கு நாட்டின் பல பகுதிகளில் இருபது கிளை நிலையங்களும் ஐந்து மாணவர் விடுதி களும் உண்டு. பிரிட்டிஷ் கௌன்சில், மாணவர்களை ஏற்றுக்கொள்ளும் குடும்பங்களைப் பற்றியும் விடுதி களைப் பற்றியும் தகவல்களைத் தொகுத்து வைத்திருக் கிறது. வேறு பல சங்கங்களும் வெளிநாட்டு மாண வர்களுக்கு ஜாகை வசதியளிக்கின்றன.

சமூகநலச் சங்கங்களின் மூலம், பிரிட்டிஷ் குடும்பத் தினர், வெளிநாட்டு மாணவர்களை விருந்துகளுக்கு அழைப்பதுண்டு. மாதர் சங்கங்களும் அங்கங்குள்ள சமூகச் சங்கங்களும் சங்க நிகழ்ச்சிகளிலும் விருந்து களிலும் பங்கெடுத்துக் கொள்ளுமாறு அறிமுகமுள்ள வெளிநாட்டு மாணவர்களுக்கு அழைப்பு அனுப்புவது முண்டு.

வெளிநாட்டு மாணவர்களுக்குப் பிரிட்டிஷ் மக்களு டன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைப்பதால் பிரிட் டனுக்கும் வெளிநாடுகளுக்குமுள்ள உறவு உறுதிப்படு கிறது. வெளிநாட்டு மாணவர்கள் தம்தம் நாட்டு (கலா சாரத்) தூதர்களாக பிரிட்டனில் பணியாற்றுகிறார்கள். பிரிட்டிஷ் மக்களுடைய கலாசாரத்தையும் அன்பையும் தம்தம் நாடுகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

# ஐரோப்பாவின் மிகப்பெரிய துறைமுகம்

19-வது நூற்றுண்டின் பிற்பகுதியில் ஜெர்மன் தொழிற் பரப்பு மிகவும் அதிகமாகி, முன்பு எப்போதும் இல்லாத அளவுக்குப் பெருகியது. அதன் காரணமாக ரோட்டர்டாம் ஐரோப்பாவின் மிகப் பெரிய துறைமுக மாக உருவாயிற்று.

மிக வேகமாகப் பெருகி வந்த கனரகத் தொழிலால் தொழிற் பரப்பு அதிகமாயிற்று. அதன் விளைவாக மிகுந்த அளவில் ஏற்றுமதியும் இறக்குமதியும் நடைபெற வேண்டியதாயிற்று. கனிஜங்கள், மரம், கரி, தானியம் முதலியவை ரைன், ரூர் முதலிய பகுதிகளுக்கு அனுப்ப நேர்ந்தது. இதனுல் ரோட்டர்டாம் வளர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

வட கடலிலிருந்து ரைன் நதியின் முகத்துவாரம்வரை புதிய நீர் வழிப் போக்குவரத்து ஒன்று, 1866 முதல் 1884-க்குள் உருவாயிற்று. தங்கு தடையின்றி, மணல் மேடின்றி அமைந்த அந்தப் புதிய கால்வாய் ரோட்டர் டாம் வளர்வதற்கு வசதியாக அமைந்தது.

19-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில், குறிப்பாக 1860-1885-இல் 25 ஆண்டுகளில் வர்த்தகக் கப்பல்கள் மறைந்து நீராவிக் கப்பல்கள் கடற் பிரயாணத்தைத் துவங்கின. மிகப் பெரிய நீராவிக் கப்பல்கள் கடல் வாணிபத்தில் ஈடுபட நேர்ந்ததை யடுத்து உலகத் துறைமுகங்கள் அனைத்தும் பெரும் மாறுதலுக்குள்ளாயின. மாறி வரும் கப்பல்களின் அமைப்பு, பெருகிவரும் கடல்

வாணிகம் ஆகியவற்றுக்கேற்ப ரோட்டர்டாம் துறை முகம் மாறிற்று.

துறைமுகத்தை விரிவு படுத்துவதற்கான நடவடிக்கைகள் துவங்கின. ஐரோப்பியப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு மாறுதலும் துறைமுகத்தை விரிவு படுத்த உதவியது. 1930 ஆம் ஆண்டுக்குப் பிறகு எண்ணெய் ஏற்றுமதி பெருகியதை யடுத்து, எண்ணெய்ச் சேமிப்பு நிலையங்களை ஏற்படுத்தி, துறைமுகத்தை இன்னும் பெரிதாக்கினர்கள்.

1850 முதல் 1930 வரையான எண்பதாண்டுகளில் ரோட்டர்டாமில் கப்பல் போக்குவரத்தின் அளவு மிகவும் பெருகியது. 1938-இல் ரோட்டர்டாமில் ஏற்றி இறக்கப் பெற்ற சரக்குகள் நாலேகால் கோடி டன். சில அம்சங்களில் இந்த அளவு, லண்டன் துறைமுகத்தின் ஏற்றுமதி இறக்குமதி யளவைக் காட்டிலும் அதிகமாகும்.

சரக்கின் அளவு வேகமாகப் பெருகப் பெருக அதற்கேற்றபடி துறைமுகத்தின் அளவும் வசதிகளும் பெருக வேண்டிய தேவை ஏற்பட்டது. 1894-ஆம் ஆண்டில் ரோட்டர்டாம் துறைமுகத்தில் மின்சாரத்தால் இயங்கும் பளுதூக்கி யந்திரங்கள் அமைக்கப்பெற்றன. ஐரோப்பாவில் இந்த வசதியை ஏற்படுத்திய முதல் துறைமுகம் இதுவே யாகும்.

நவீன சாதனங்கள், தொழிலாளரின் திறமை காரணமாக, எத்தகைய போக்குவரத்தும் சமாளிக்கப்பெற்று வந்தது.

இரண்டு உலகப் போர்களுக் கிடையே எண்ணெய் உற்பத்தியும் அதைப்பயன்படுத்துவதும் மிகவும்அதிகமா

யிற்று. 1900-ஆம் ஆண்டில் ராயல் டச்சு எண்ணெய்க் கம்பெனி, மேற்கு ஐரோப்பாவுக்கு குறிப்பாக ஸ்விட்சர் லாந்துக்கும் ஜெர்மனிக்கும்-தனது எண்ணெய் விநியோ கம் செய்யும் கேந்திரமாக ரோட்டர்டாமைத் தேர்ந் தெடுத்தது.

1938-ஆம் ஆண்டில் ரோட்டர்டாம் துறைமுகத்தின் எண்ணெய் ஏற்றுமதி இறக்குமதியின் அளவு 29 லட்சம். இப்போது அந்த அளவு பத்து மடங்கு பெருகியிருக் கிறது.

இரண்டாவது உலகப் போரிலும், ஜெர்மனி ஹாலந்தைத் தனது ஆதிக்கத்தில் வைத்திருந்தபோதும், ரோட்டர்டாம் துறைமுகம் பெரும் சேதத்துக் குள்ளா கியது.

என்றாலும் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கிடையே 1948 ஆம் ஆண்டில் ரோட்டர்டாம் மீண்டும் தலை நிமிர்ந்து நின்றது. 1949-ஆம் ஆண்டில் அந்தத் துறை முகம் முழுவதும் கட்டி முடிக்கப்பெற்றது. மின்சார, டெலிபோன் வசதிகள் அமைக்கப்பெற்றன. கடல் நீரின் ஆழம் அதிகமாகியது; துறைகளில் பலவித வசதிகளும் ஏற்பட்டன. சாதனங்கள் பெருகின. நவீனத் துறை முகத்துக்குத் தேவையான அனைத்தும் அங்கே அமைந் திருந்தன.

உலகத் துறைமுகங்களில் முன்பு தனக்கிருந்த இடத்தை ரோட்டர்டாம் மீண்டும் பெற்றுவிட்டது. கப்பல் போக்குவரத்தைப் பார்க்கும்போது ரோட்டர் டாம் ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய துறைமுகமாகும். உலகின் மிகப் பெரிய துறைமுகங்களில் முதலிடத்தை நியூயார்க் பெறுகிறது; இரண்டாவதாக நிற்பது ரோட் டர்டாம்.

உலகப் போருக்குப் பிறகு டச்சப் பொருளாதாரம் பரந்து விரிந்தது; தொழிற்சாலைகள் பெருகின. வளம் மிகுந்தது, மக்களின் வாங்கும் திறன் அதிகமாகியது. ஆகவே சரக்குகளின் போக்குவரத்தும் வளர்ந்தது. இதற்குப் புதிய நீர்வழிப் போக்குவரத்து பெருமளவு துணைபுரிந்தது.

ரோட்டர்டாம் துறைமுகம் வளர இவை காரணமாய் அமைந்தன. அதற்கு வருவாய் கிடைக்கும் வகையில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப் பெற்றன.

ரோட்டர்டாம் துறைமுக வளர்ச்சிக்காக 'போட் லெக்', 'யூரோ போர்ட்' என்ற இரு திட்டங்கள் வரையப் பெற்றன.

ராயல் டச்சு எண்ணெய்க் கம்பெனி மட்டுமன்றி, கால் டெக்ஸ் கம்பெனியும் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற் சாலை ஒன்றை ரோட்டர்டாம் பகுதியில் அமைத்திருக் கிறது.

கால்டெக்ஸ் எண்ணெய் சுத்தித் தொழிற்சாலையின் விஸ்தரிப்பு, எஸ்ஸோ எண்ணெய் வடிகட்டும் தொழிற் சாலை முதலியவற்றை யடுத்து ரோட்டர்டாமில் ஆண் டொன்றுக்கு இரண்டரை கோடி டன் எண்ணெய் தயாராகிறது.

இந்த அளவு பெருகி வருவதால் அந்தத் துறை முகத்தின் முதலிரண்டு எண்ணெய்த் துறைகளும் போதமாட்டா என்று கண்டு போட்லெக் பகுதியை மூன்ருவது எண்ணெய்த் துறையாகப் பயன்படுத்துவது என்று தீர்மானித்தார்கள்.

ரோட்டர்டாமில் பல்லாண்டுகளாக இருந்து வரும் கப்பல் கட்டும் தொழில் போட்லெக் பகுதியில் பரவி

வருகிறது. வெரொல்மி தொழிற்சாலை மிகப் பெரிய கப்பல்களைக் கட்டி முடிப்பதில் சிறந்து விளங்குகிறது. அதன் வியாபாரமும் பெருகி வருகிறது.

அதிகமாகி வரும் சரக்குப் போக்குவரத்தைச் சமாளிப்பதற்கு போட்லெக் திட்டம் போதுமானதாயிருக்கும் என்று எல்லோரும் நம்பினார்கள். ஆனால் நிலைவம அவ்வாறில்லை. ஆகவே 'யூரோபோர்ட்' என்ற மிகப் பெருந் திட்டம், ரோட்டர்டாம் துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்காக, *1958*-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பெற்றது. இது போட்லெக் திட்டத்தின் தொடர்ச்சியும் முடிவும் ஆகும் என்று கூறலாம்.

ரைன் நதியின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள காரணத்தால் ரோட்டர்டாமின் பெருமை இன்னும் அதிகமாக வாய்ப்பிருக்கிறது. உலகப் போருக்கு முன்னால் புதிய நீர்வழிப் போக்குவரத்து மூலமாக வந்த கனிஜங்கள் ஐரோப்பாவிலிருந்தும் வடக்கு ஆப்பிரிக்காவிலிருந்தும் வந்தன. இப்போது அவை உலகெங்கிலுமிருந்தும் வருகின்றன.

போட்லெக் துறையில் *47,000* டன் நிறையுள்ள எண்ணெய்க் கப்பல்கள் வந்து தங்கலாம். யூரோபோர்ட்டில் அமைக்கப்பெற விருக்கும் நான்காவது எண்ணெய்த் துறையில் *65,000* டன் நிறையுள்ள கப்பல்வந்து தங்க வசதி யிருக்கும்.

கரையோரமாக ராடார் நிலையங்கள் அமைந்திருப்பதும் ரோட்டர்டாமின் மற்றொரு சிறப்பாகும்.

# இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே

எஃகின் கதை ஒரு விதத்தில் உலகின் கதையாகும். உலகமெங்கும் வாழ்க்கை நிலை உயரவும், அமைதி நிலை பெறவும், செழிப்பு மல்கவும் நடக்கும் ஏற்பாடுகளால் இந்த மூல உலோகம் எல்லா இடங்களிலும் மேலும் மேலும் தேவைப்படுகிறது. எஃகின் உற்பத்தி வளர்ந் தோங்கும் மாபெரும் யுகம் ஆரம்பமாகிவிட்டது.

அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, ஜப்பான் முதலிய தொழில் வளம் படைத்த நாடுகளில் எஃகு உற்பத்தி இடையருமல் பெருகிக்கொண்டே வந்துள்ளது. என்ருலும், இந்தியா, பெரு, வெனிஸூலா போன்ற நாடுகளும் இத்துறையில் முன்னணிக்கு வர முழு மூச்சுடன் முயன்று வருகின்றன. வீட்டில் தையல் ஊசியானுலும் விண்ணில் ஜெட் விமானமானுலும் எஃகு இல்லாமல் முடியாது.

இந்தியாவின் எஃகு உற்பத்தி *1950*-ஆம் ஆண்டில் *16* லட்சம் டன்னுக இருந்தது. *1955*-ஆம் ஆண்டில் *20* லட்சம் டன்னுக உயர்ந்தது. இந்த ஆண்டு முடிவுக்குள் இது *68* லட்சம் டன்னுக ஓங்கிவிடும். இதில் பாதியளவு மாபெரும் டாட்டா ஆலைகளிலிருந்து வெளிவரும்.

• •

எஃகுத் தொழில் எல்லாத் தொழிலுக்கும் அடிப் படையாகும். மிகப் பெரிய உலையில் இரும்பைச் சுத்தம் செய்து, சில கலப்பு உலோகங்களையும் கரியையும் அத னுடன் சேர்த்து எஃகு உற்பத்தி செய்கிருர்கள்; சுருக்க மாகச் சொன்னல், இதுதான் உற்பத்தி செய்யும் முறை. ஆனல் சிறிது காலமாக இம் முறை பெரிதும் மாறுதல்

அடைந்துள்ளது; முக்கியமாக அமெரிக்காவில் இது உண்மை.

முன்பெல்லாம் எஃகுத் தொழிலாளிக்கு இருக்க வேண்டிய முதல் தகுதி உடல் வன்மையேயாகும். இன்றும் அது முக்கியந்தான். எனினும், அவன் பயிற்சியுள்ள தொழில் நுட்பசாலியாக விளங்குவதைக் காணலாம். சிக்கல் மிக்க எத்தனை எத்தனையோ கருவிகள் அவன் கையில் இன்று அமைந்து வேலை செய்கின்றன. அமெரிக்க ஆலை ஒன்றினுள் நுழையுங்கள்; மைல் கணக்காக நடந்து சென்றாலும் தொழிலாளிகள் மிகச் சிலரே இருப்பர்.

இன்னொன்று: ஒருவர் எஃகு ஆலையில் வேலை செய் செய்கிறார் என்றால், அவர் குடும்பத்திலுள்ள ஆண்கள் வேறெங்கும் வேலை செய்வது அரிது. ஜாம்ஷெட்பூர் போன்ற அநேக இடங்களில் எஃகு ஆலைகளில் தந்தையும் மகனும் வேலை செய்வதைக் காணலாம். மற்றத் தொழில்களோடு ஒப்பிட்டால், இங்கு ஊதியமும் அதிகம். வைத்திய வசதி முதலிய பலவற்றுக்கு இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடுகளும், ஓய்வுகாலச் சம்பளமும் உண்டு.

எஃகு ஆலைக்குக் கண்போன்றது ஊது உலை. அதனுள்ளேதான், இரும்புக்கனிப் பொருளையும், கல்கரியையும், சுண்ணாம்புக்கல்லையும் கலப்பு உலோகங்களையும் அதனதன் அளவுப்படி செலுத்துவார்கள். திடீரென உலையும் அதன் உள்ளே உள்ளவையும் தீப் பிழம்பாகிச் சுடர்விடும். உருகிய சுண்ணாம்புக்கல் உலோக மல்லாத கனிப்பொருள்களைத் தின்றுவிடும்; கல் கரிக் கழிவு குழிகள் வழியே வெளியே ஓடிக் குவியல் குவியல்களாகச் சேரும்.

சரியான நேரம் வந்ததும், ஊது உலைகள் தூக்கிச் சாய்க்கப்பெற்று, உருகிய உலோகம் வளர்ப்பு அச்சுக் களில் ஊற்றப்படும். குளிர்ந்தபின், இந்தத் தேனிரும்புக் கட்டிகள் கார்களிலாவது சுமை தூக்குப் பட்டைகளி லாவது பெஸ்ஸமர் உலைகள் அல்லது திறந்த உலைகள் அல்லது தற்கால மின் விசை உலைகளுக்கு அனுப்பப் பெறும். அங்கு அவைமேலும் சுத்தமாகும், இங்கு உரு வாகி வெளிவரும் எஃகுக் கட்டிகளே தண்டவாளங்கள், உத்தரங்கள், சைக்கிள் சட்டங்கள், மோட்டார்கார்த் தகடுகள், இயந்திரங்கள் முதலியன செய்ய உதவு கின்றன.

## புதிய முறை

விஞ்ஞான ஆராய்ச்சி மேலும் ஒரு புது முறையை இன்று கண்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள ஒரு ஸ்தாப னம் ஊது உலைகள் இல்லாமலே தகடுகள் உற்பத்தி செய் யும் புது வழி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறது. இதனுல் உற்பத்திச் செலவு பெரிதும் குறையும்.

புது முறைப்படி, முதலில் இரும்புக் கனிப் பொருள் சுத்தம் செய்யப் பெற்று நுண்ணியதாகப் பொடியாக்கப் பெறுகிறது. பின்னர் அப் பொடி உருளைகளுக்கிடையே செலுத்தப்பெற்று தகடாக வெளிவரும்; இத்தகடு சரி யான திடப் பொருளாக இருக்காது. பின்னர், இத்தகடு 1,204 டிகிரி (சென்டிகிரேடு) வெப்பம் உள்ள உலையின் வழியேயும் அதன்பின் சூடான உருளைகளுக்கிடையேயும் அனுப்பப்பெறும். இந்த உருளைகள் என்னென்ன திண் ணத்திலும் சுருளிலும் வேண்டுமோ அந்தந்த அளவுப்படி எஃகுத் தகட்டை உற்பத்தி செய்யும். பழகிய முறைப் படி செய்த எஃகு போலவே இந்த எஃகும் நல்ல தர மானதாக இருக்கும்.

இன்றுள்ள ஆலைகளில் காணப்படும் இயந்திர சாதனங்களில் பத்துக்கு நான்கு அல்லது ஐந்து பங்குச் சாதனங்களை மட்டுமே பயன்படுத்தும் புதிய ஆலைகள் இன்னும் ஐந்தாறு ஆண்டுகளுக்குள் தோன்றிவிடும்.

ஸ்காட்லாந்து நாட்டு வழிவந்த அமெரிக்கரான ஆன்ட்ரூ கார்னகி எஃகு ஆலைகள் நிறுவிப் பெரும் பொருள் ஈட்டினார். உலகில் அவர் பெயரால் கிட்டத்தட்ட 12 ஆயிரம் பொது நூலகங்கள் உள்ளன. பலநாடுகளில் உள்ள இந் நூலகங்களெல்லாம் அவர் சேர்த்த பணத்தால்தான் நடைபெறுகின்றன, இந்தியாவிலும் ஜாம்ஷெட்ஜி டாட்டா திரட்டிய பெருஞ் செல்வம் வைத்திய ஆராய்ச்சிக்கும்,உபகாரச் சம்பளங்களுக்கும், மற்றும் பல பொது நலத் தொண்டுகளுக்கும் இடையறாமல் பயன் பெற்று வருகிறது.

# கொய்த மலர்கள்

**பிரார்த்தனை**

ஜகன் மாதாவே! மனிதர்களிடமிருந்து நான் யாதொரு கௌரவத்தையும் விரும்பவில்லை. இந்திரிய சுகங்கள் ஒன்றும் எனக்கு வேண்டாம். கங்கையும் யமுனையும் இரண்டறக் கலப்பதுபோல என் ஆத்மா உன்னிடம் வந்து புகும்படி மட்டும் கிருபை புரிவாயாக.

தாயே! என்னிடம் பக்தியும் இல்லை; யோகமும் இல்லை; எனக்குச் செல்வமும் இல்லை, துணைவரும் இல்லை, ஒருவரிடமிருந்து நான் புகழ்ச்சியை விரும்புவது மில்லை. என் மனம் எப்போதும் உன் பாத கமலங்களில் என்றென்றும் வசிக்கும்படி மட்டும் அருள் புரிவாய்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

**ஆசைகள்**

தாய் நண்டு தனது பொந்தில் இருந்துகொண்டே அடிக்கடி வெளியே எட்டிப் பார்த்துவிட்டுப் பின் உள்ளே போய்விடுகின்றது. பொந்தைவிட்டு வெளியே வரப் பல முறை அரும்பாடு படுகின்றது; ஆயினும் வரமுடியாது போகின்றது. ஏன்? பொந்துக்குள் வாழும் தன் குட்டிகளை நோக்கி மனம் இழுக்கப் படுவதினால். அது எவ்வளவு முயன்றாலும் அந்த இழுப்புக்கு வசப்பட்டு உள்ளே போகிறது. உலக வாழ்க்கையில் மூழ்கி யிருப்பவர்களுடைய மனமும் இப்படியேதான், ஓர் ஆசையிலிருந்து பல ஆசைகள் கிளம்ப. அதனால் அவர்களுடைய மனமும் சக்திகளும் பாழாகின்றன.

—சாரதா மணி தேவி

## அபூர்வப் பட்சிகள்

நம்முடைய கவிகள் தம் மகாகாவியங்களில் இரண்டு அபூர்வப் பட்சிகளைப்பற்றிச் சொல்லுவது வழக்கம். சாதகம் என்பது ஒரு பட்சி; சகோரம் என்பது ஒரு பட்சி.

சகோதரத்திற்கு ஆகாரம் சந்திரகிரணம். சந்திரன் இல்லாத அமாவாசையிலும், அதை யடுத்த இரண்டு மூன்று நாட்களிலும் அது பட்டினிதான். மற்ற நாட்களில், அதுவும் பூரணமான சந்திர கிரணம் உள்ள தினங்களில் அதையே ஆகாரமாகச் சாப்பிடுவது சகோரம்.

பாலைவனங்களில் ஒட்டகம் அதிகமாக வாசம் செய்யும். சஹாராப் பாலைவனம், ராஜஸ்தான் பாலைவனம் இப்படி இன்னும் சில இடங்கள் இருக்கின்றன. அங்கே தண்ணீர் எங்குமே கிடைக்காது. எட்டு மைல், பத்து மைல் தூரத்திற்கு ஒரு கிணறு இருக்கலாம். நம் பக்கங்களில் ஒரு பெரிய கோயில் கட்டுவதற்கு ஆகும் செலவை விட இன்னும் அதிகமாகவே அங்கே ஒரு கிணறு வெட்டுவதற்கு ஆகும். கிணறு வெட்டினலும் கொஞ்சம் தண்ணீர்தான் கிடைக்கும். ஐந்து லட்சம், பத்து லட்சம் என்று செலவழித்து அங்கே பெரிய கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள். அங்கிருந்து ஜலத்தை எடுத்து ஒட்டகத்தின் முதுகில் தோல் பையில் வைத்துக் கொண்டு வந்து ஊரெல்லாம் கொடுப்பார்கள். ஒரு குடத்திற்கு இவ்வளவு என்று காசு கொடுத்து வாங்கவேண்டும்.

• • •

ஒட்டகத்தின் சுபாவம், தண்ணீர் கிடைக்கிற ஓர் இடத்தில் நிறையத் தண்ணீரைக் குடித்துவிடும். அதற்கு நிறையத் தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளும்படியான குடல் இருக்கிறது. தண்ணீர் கிடைக்காத பாக்கி நாட்களில் இந்தத் தண்ணீரை உபயோகப்படுத்திக் கொள்ளும். ஒரு நாள் தண்ணீரை நிறையக் குடித்துவிட்

டால் அப்புறம் அநேக நாட்கள் தண்ணீர் குடிக்க வேண்டாம். இதுபோன்றதுதான் சாதகப் பட்சி.

சாதகப் பட்சியினுடைய ஆகாரமே மழைத்திவலை தான். மழை பெய்யும்போது, வாயைத் திறந்து ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு, அந்த நீர்த்துளிகளைக் குடித்து அது ஜீவனம் பண்ணும். அப்புறம் மழை இல்லாத காலங்களில் ஆகாரம் இல்லை. கொஞ்சம் அதிக நாட்கள் மழை வராவிட்டால், அது. "மழை வராதா? மழைவராதா?" என்று ஏங்கிப் பார்த்துக்கொண்டிருக்குமாம்,

சாதக பட்சி என்பது உண்டா? சகோரப் பட்சி என்பது உண்டா? வெறும் கதையா என்றால் எனக்குத் தெரியாது. இந்த இரண்டு பட்சிகள், இருப்பதாகச் சொல்லி கவிகள் காவியங்களில் வருணித்திருக்கிறார்கள்.

—காஞ்சி காமகோடி பீடாதிபதி

**மாயை**

சேராததை முடித்து வைப்பது எதுவோ அதுதான் மாயை. எது இன்னதென்று சொல்ல முடியாததோ அது தான் மாயை.

— வடமொழிச் சுலோகம்

**மெய்யறிவு**

மெய்ப் பொருளைப் பொய்ப் பொருளினின்றும் பிரித்தறியும் விவேகமே மெய்யறிவு எனப்படும். இதன் துணையால் ஞானி ஒருவன், மெய்ப்பொருள் உடலன்று என்பதையும், தூல சூக்கும உடல்களுக்கு உயிரைக் கொடுக்கும் சுயம் பிரகாசமான ஆத்மா என்பதையும் உணர்வான்.

கரும்பு எத்தனை செயல்களுக்கு உட்பட்ட பின்பு, வெல்லப் பொம்மையின் சுத்த வடிவத்தை அடைகிறது

என்பதைப் பார். முதலில் கரும்பை ஆலையில் கொடுத்து அதன் சாற்றைப் பிழிய வேண்டியிருக்கிறது. பின் அக் கருப்பஞ்சாற்றை அடுப்பில் வைத்துக் காய்ச்சிப் பின் ஆற வைத்து, அதை வெல்லக் கட்டியாக உறையும்படி செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் வெல்லப் பொம்மை யின் வடிவமாக அதை வார்க்குமுன், அதை மறுபடியும் உருக்கவேண்டி யிருக்கிறது.

அதுபோல, விவேக முடையார் முதலில் வெளிப் பார்வைக்குக் கட்டியாயுள்ள தூல உடலின் பொய்ம்மையை முதலில் உணர்கிறார். பின் சூக்கும உடலை அழித்துவிடுகின்றனர். முடிவில் அகங்காரத்தையும் நிர்மூலமாக்கித் தானே பிரம்மமாகின்றனர்.

—ஏசுநாதர்

## அரசனும் ஞானியும்

ஞானி அரசனாக வேண்டும். அரசன் ஞானியாக வேண்டும்.

—மார்க்ஸ் ஔரேலியர்

## அச்சமும் அச்சமின்மையும்

தனிமையாய் இருத்தல் என்றால், ஒருவராய் இருத்தல், தூய்மையோடு இருத்தல் என்பதே யாகும். அதற்கு அச்சமின்மை என்பதும் பொருளாகும்.

இருவர் இருக்கும் இடத்தில் அச்சம் எப்போதும் உண்டு. நம்மைக் காப்பாற்ற ஒரு துணை வேண்டும் என்று கருதுகிறோம். இருட்டில் இரவில் வெளியே செல்லும் போதும், வெளிச்சமற்ற வீட்டிற்குள் புகும்போதும், நம் முடன் வேறொருவர் இருத்தலை நாம் விரும்புகிறோம். 'கோபாலன் என்னுடன் வரட்டும். எனக்குத் தனியே செல்லப் பிரியமில்லை' என்கிறோம். உண்மையில் நாம் தனியே உள்ளபோது மட்டும் அச்சமின்மை எனும்குணம் எழுகின்றது.

நாம் தனியே உள்ளபோது, நாம் ஆடலாம், பாடலாம். நினைத்ததையெல்லாம் செய்யலாம். ஆனால் ஒரு நண்பன் வரட்டும், உடனே நாம் செய்வதைப்பற்றி மிக ஜாக்கிரதையாக இருக்கத் தொடங்குகிறோம். அப்போது நமக்குக் கட்டுப்பாடு உண்டாகிறது. நம்மையே நாம் உணரத் தொடங்குகிறோம்.

இரண்டு உள்ளவிடத்து அச்சம் உண்டாகிறது; ஒன்று உள்ளவிடத்து அச்சமின்மை உண்டாகிறது.

நமக்கு அச்சம் உள்ளவரை, சந்தோஷமாயிருத்தல் இயலாதாதலின் 'நான் தனியே உள்ளேன். எனக்கு யாதொன்றும் வேண்டாம்' என்று சொல்ல முடியும்வரை சாந்தியடைய நமக்கு இயலாது.

—ராமகிருஷ்ணானந்தர்

**மனிதனின் சுயேச்சை**

ஒரு மனிதனுடைய சுயேச்சையை வேறு ஒருவராலும் அபகரிக்க இயலாது.

—எபிக்டிடஸ்

**ஆபத்து நேர்ந்தால்**

ஆபத்துக்குள்ளாகிவிட்ட ஒரு மனிதன் "ஓர் அரங்கத்துக்குச் சென்று மல்யுத்தம் செய்து வரும்படித் தெய்வமே தன்னை அனுப்பிவிட்டது" என்று மறவாமல் நினைத்துவரல் வேண்டும்.

—எபிக்டிடஸ்

**ஓம்.**

எந்த நிலையை எல்லா வேதங்களும் கூறுகின்றனவோ, சகல தவங்களும் எதைப்பற்றி நிற்கின்றனவோ, எதை விரும்பிச் சாதுக்கள் ஆத்ம வழியில் செல்கின்றனரோ, அந்த நிலையைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்—அதுதான் ஓம்.

—சுருதி வாக்கியம்

## அன்பும் இரக்கமும்

வறியவரிடத்தில் தளராத அன்பும், தாழ்த்தப் பெற்றோரிடத்தில் கழலாத இரக்கமும் இருக்க வேண்டும்.

—விவேகாநந்தர்

## ஒழுக்கம்

மாணவர்களும் மாணவிகளும் பள்ளிக்கூடத்தில் படிக்கும்பொழுது ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்ளாவிட்டால், அவர்களுடைய படிப்புக்காகப் பணத்தைச் செலவிட்டது தேசத்திற்கே பெரிய நஷ்டமாகிவிடும்.

—காந்தியடிகள்

## கடவுளின் அருள்

அசுவினி குமார தத்தரின் குருவின் பெயர் ராஜ நாராயண வசு. வசு, கடவுளிடம் உண்மையன்பு கொண்டவர். தமது வாழ்நாளின் பிற்பகுதியில் அவர் பட்சவாத (உடலின் ஓர்பகுதி செயலற்றுப்போதல்)நோயால்வருந்தினர். அவர் அரசாங்க விடுதியில் தங்கியிருந்தார்,

ஒரு நாள் அசுவினி தம் குருவைக் காணச் சென்றார். நோயால் வாடும் அவரைக் காணவேண்டியிருந்தமையால், அசுவினியின் முகம் வாட்டமுற்றிருந்தது.

வணங்கிக்கொண்டே நுழைந்த அசுவினிகுமார தத்தரைக் கண்டதும், வசுவின் முகம் மிகவும் மலர்ந்தது. "அன்பா! அசுவினீ வா! வா! உன்னைப்பார்த்துப் பல நாட்கள் ஆயின" என்று சொல்லிக்கொண்டே படுத்த வண்ணமே அசைக்கக்கூடிய ஒற்றைக் கையினல் அன்புடன் அசுவினியை வசு தழுவிக்கொண்டார்.

பின்னர், வேதங்கள், சாஸ்திரங்கள் உபநிஷத்துக்கள், புராணங்கள் முதலியவற்றினின்றும் உயர்ந்த கருத்துக்களை மாணவனுக்குக் கூறினர்.

சுமார் நான்கு மணி நேரம் கழிந்தபின், அசுவின் விடைபெற்றுச் செல்ல எழுந்தார்.

"ஆசிரியரே, தாம் நோயினால் வருந்துகின்றீர் எனக் கேட்டு வருத்தத்துடன் தம்மைக் காண வந்தேன். ஆனால் நான்கு மாதங்களாய்ப் படுத்த வண்ணமிருந்தும் தங்கள் உள்ளத்தில் துன்பத்தின் உணர்ச்சியே இருப்பதாய்த் தெரியவில்லையே! எப்போதும் போலவே இன்பமாக வல்லவோ காலம் இன்றும் கழிந்தது. உங்கள் மனப்பான்மை விந்தையாக உளது" என்றார் அசுவினி.

"அசுவினீ! கடவுளின் அருளால் பலவற்றைக் கண்டு இன்பமுற்றேன். கேட்டு மகிழ்ந்தேன். பல தின்பண்டங்களைப்புசித்தும் சுகம்பெற்றேன். அதே கடவுளின் அருளினால் எழுந்திருக்க முடியாமல் சில நாட்கள் படுத்திருக்க நேர்ந்தால், அதற்காக ஏன் வருந்த வேண்டும்? அதையும் கடவுளின் அருள் என்று எண்ணி ஏன் இன்பமுறக் கூடாது? கடவுளின் அருள் இன்பத்தை அளித்தால் என்ன? துன்பத்தை அளித்தால் என்ன? பொறுப்பு அவருடையது தானே?" என்று ராஜ நாராயண வசு அன்பு பெருகக் கூறினர்.

## புத்தர் வாக்கு

வழக்கில் தீர்ப்பளிப்பதனாலேயே ஒருவர் நீதிபதியாக மாட்டார். பண்டிதரான ஒருவர் மெய்யையும் பொய்யையும் ஆராய்ந்து பார்த்து, யோசனையோடு பட்சபாதம் இல்லாமல் நேர்மையாகத் தீர்ப்பளிக்கிறார். தர்மமே போற்றும் அந்த அறிஞரைப் பண்டிதர் என்று சொல்லுவார்கள்.

ஒருவர் அதிகமாகப் பேசுவதினாலேயே அறிஞர் ஆக மாட்டார். பொறுமையும், அன்பும், அடக்கமும் உடையவராய் அச்சம் இல்லாதவர் யாரோ, அவரே பண்டிதர்.

ஒருவர் அதிகமாய்ப் பேசுகிறபடியினாலேயே தர்மத்தை அறிந்தவர் ஆகமாட்டார். தாம் கேட்டது சிறிது அளவாக இருந்தாலும் அதை ஆழ்ந்து சிந்தித்துப் பதிய வைத்து, மனத்தில் அதை உறுதியாகப் பிடித்திருப்பவரே தர்மத்தை அறிந்தவர் ஆவார்.

தம்முடைய தலைமயிர் நரைத்துவிட்டதனாலேயே ஒருவர் அறிவாளி ஆகமாட்டார். அவருடைய வயது மட்டும் முதிர்ந்துவிட்டது. அவர் "வீணாக வளர்ந்தவர்" எனப் படுவார்.

உண்மையும் நேர்மையும் அஹிம்சையும் அடக்கமும் உள்ளவர் யாரோ, அந்தக் குற்றமற்ற அறிஞர், உண்மையாகவே அறிவாளி என்ற பெயருக்கு உரியவர் ஆவார்.

**மதம்**

மதம் உனக்குப் புதிதாக எதுவும் தருவதில்லை. அது தடைகளை அகற்றி உன்னை உன்னையே காணும்படி விடுகிறது.

—விவேகாநந்தர்

**தீமை**

மனிதர்கள் தவறிப்போக வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒருவரும், அடையாளங்கள் வைப்பதில்லை. அவ்வாறே உலகத்தில் தீமை என்பது இல்லை.

ஒரு கைகாட்டி மரத்தின் உதவியை மறுத்து வேறு வழியில் செல்பவன், தான் உத்தேசித்த இடத்துக்குப் போய்ச் சேராவிடில், அது கைகாட்டி மரத்தினால் விளைந்த கேடாகாது. அவ்வாறே நன்னெறியில் ஒழுகத் தவறிய ஒருவனுக்குத் தீங்கு உண்டாகிவிடில், அது அவனது குற்றமே யாகும். ஆதலால், உலகில் தீமை என்பதில்லை என்பது வெளிப்படுகிறது.

—எபிக்டிடஸ்

## ஏசுநாதர் அருள்மொழி

துன்பத்தை அனுபவிப்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள்; அவர்கள் அமைதி பெறுவார்கள்.

சாந்தம் நிறைந்தவர்கள் அதிர்ஷ்டசாலிகள்; அவர்கள் நாட்டைப் பெறுவார்கள்.

நீதியின்மேல் நாட்டமுள்ளவர்கள் அதிர்ஷ்டசாலிகள்; அவர்கள் நிறைவை அடைவார்கள்.

இரக்கம் உள்ளவர்கள் அதிர்ஷ்டசாலிகள்; அவர்களிடம் பிறரும் இரக்கம் காட்டுவார்கள்.

உள்ளத் தூய்மை உள்ளவர்கள் அதிர்ஷ்டசாலிகள்; அவர்கள் ஆண்டவனைக் காண்பார்கள்.

சமாதானம் செய்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள்; அவர்களை ஆண்டவனுடைய மக்கள் என்று அனைவரும் ஏத்துவர்.

நீதிக்காகத் துன்பப்படுபவர்கள் அதிர்ஷ்டசாலிகள்; ஏனெனில் பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

## உள்ளும் புறமும்

ஆடாமல் வெளியே இருந்து வேடிக்கை பார்ப்பவன் ஆட்டத்தின் குணதோஷங்களை நன்ருக உணர முடியும். அதுபோல் நாமும் உடல், மனம், புத்தி ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்திக் கொள்ளும்போது அவற்றின் குணதோஷங்களை உணர முடியும்.

—விநோபா பாவே

# கடலாதிக்க உரிமை

கடலாதிக்க உரிமைச் சிக்கலைத் தீர்ப்பதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவில், சமீபத்தில் ஜினீவாவில் கூடிய மகாநாட்டில், பல நாடுகள் பங்கு எடுத்துக்கொண்டன. கரையோரக் கடலாதிக்கம், மீன்பிடி உரிமைப் பகுதி என்ற இரு பிரச்னைகளில் தீர்வு காண்பதே மகாநாட்டின் முக்கிய நோக்கம். இந்தப் பிரச்னைகளில் உடன்பாடு காண்பது, சர்வதேச நோக்கில் அவசியமாகும். தற்சமயம், ஒவ்வோர் நாடும், ஒவ்வொரு விதமாகக் கரையோர கடலாதிக்க உரிமை கொண்டாடுகின்றன. சில நாடுகள் கரையோரக் கடலில் மூன்று மைல் தூரத்துக்கு உரிமை கோருகின்றன. சில நாடுகள் கரையிலிருந்து 200 மைல் தூரத்திற்கு உரிமைகொண்டாடுகின்றன.

பிரிட்டனும், வேறு சில நாடுகளும் ஒரு குறிப்பிட்ட எல்லை வரையில் கரையோரக் கடல்மீது ஆதிக்கம் செலுத்தும் முழு உரிமை ஒவ்வொரு நாட்டுக்கும் தேவை என்று கருதுகின்றன. சென்ற பல ஆண்டுகளாகக் கரையிலிருந்து மூன்று மைல் வரை கடலாதிக்க உரிமை கொண்டாடும் வழக்கம் இருந்தது. ஆனால் இந்த வரம்பு போதாது என்பதும் காலத்திற்கொவ்வாதது என்பதும் தெளிவாகி விட்டது. கரையிலிருந்து ஆறு அல்லதுபன்னிரண்டு மைல் தூரத்திற்கு கடல்மீது ஆதிக்க உரிமை இருப்பது அவசியம். இதுநாள் வரையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மூன்று மைல்களுக்கு அதிகமாகக் கடலாதிக்க உரிமை கோருவதை எதிர்த்து வந்தார்கள். இப்

போதுமிகு தொகையாளர் தீர்ப்புக்கிணங்க, ஆறு அல்லது பன்னிரண்டு மைல் வரம்பை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

ஆனால் சிக்கல் எல்லாம் மீன்பிடி உரிமையை நிர்ணயிப்பதில்தான் இருக்கிறது, ஒரு நாடு தன்னுடைய கரையிலிருந்து எவ்வளவு மைல் தூரத்திற்கு உரிமை கொண்டாடலாம், அந்த எல்லைக்குள் அன்னிய நாட்டு மீன்பிடி படகுகளை அல்லது கப்பல்களை அனுமதிக்காமல் தடுக்கலாம் என்பதே பிரச்னை. இது உரிமை பிரச்னை மட்டுமல்ல; பொருளாதாரப் பிரச்னைகூட. தன்னுடைய கடலில் அன்னியக் கப்பல்கள் மீன் பிடிப்பதை அனுமதிப்பதால் தன்னுடைய நாட்டு மீனவர்களுடைய பொருளாதாரம் பாதிக்கப்பெறும் என்ற பயம் ஒவ்வொரு நாட்டுக்கும் உண்டு, சம்பிரதாயமான மூன்று மைல் வரம்பு, காலத்துக்கொவ்வாதது என்பதை, பலநாடுகள் அனுபவத்தால் தெரிந்துகொண்டிருக்கின்றன. ஆனால் கடலாதிக்க உரிமைக்கு எல்லை கட்டுவது எளிதல்ல. கடல் கடந்து வாணிபம் செய்யும் நாடுகள், கரையோரக் கடல் மீது, முழு ஆதிக்க உரிமையைப் பெற்றாலும், தொலை கடல் மீது, பல்வேறு காரணங்களுக்காக, ஓரளவுக்கு உரிமை கொண்டாட வேண்டியிருக்கிறது. கரையோரக் கடல்மீது பிரதேச உரிமை கொண்டாடுவதிலும் சில சிக்கல்கள் உண்டு. அன்னிய நாட்டு வர்த்தகக் கப்பல்கள். அந்தப் பகுதியைக் கடந்து செல்ல உரிமை வழங்கல் வேண்டும்; சுங்கம் வசூலிக்க கடலாதிக்க எல்லை நிர்ணயித்தல் வேண்டும். மீன் பிடிக்க ஒரு நாட்டுக்கு கரையிலிருந்து எத்தனை மைல் தூரம் வரையில் முழு உரிமையுண்டு என்பதையும் பிற நாட்டுக் கப்பல்கள் நுழைய முடியாத எல்லை வரம்பு எது என்றும் தீர்மானிக்கவேண்டும். இவையனைத்தையும்விட

முக்கியமானதோர் காரணத்திற்காகவும் கடலாதிக்க உரிமையில் தீர்வு காணும் அவசியமுண்டு. கடலுக்கு அடியில் எண்ணெயும் இதர தாதுவளங்களும் இருப்ப தால் கடல் பிரதேச உரிமையைத் தெளிவுப்படுத்திக் கொண்டால்தான் இவற்றை ஆராய்ந்து அனுபவிக்க முடியும்.

பதினெட்டாம் நூற்றுண்டில் கரையிலிருந்து மூன்று மைல் தூரம் வரையில்தான், ஓர் நாடு கடல்மீது உரிமை கொண்டாடலாம் என்ற வழக்காறு ஏற்பட்டது. அந்தக் காலத்தில் ஓர் பீரங்கி கக்கும் குண்டு சுமார் மூன்று மைல் தூரத்திற்குத்தான் செல்லும். ஆகையால் கரையி லிருந்து குண்டு பாயும் தூரம் வரையில்-அதற்கு உட் பட்ட கடற்பகுதியை அந்த நாட்டுக்குச் சொந்தமென் றும், அதற்கு வெளிப்பட்ட பகுதியைப் பொதுக் கடல் என்றும் குறிப்புட்டார்கள். இந்தக் கொள்கையைப் பல நாடுகள் ஏற்றுக்கொண்டன என்றுலும் சில நாடுகள் ஏற்கவில்லை. ஸ்பெயின் தேசம் ஆறுமைல் எல்லை வரம் புக்கு உரிமை கோரிற்று. ஸ்காண்டிநேவியா நாடுகள் கரையிலிருந்து நான்கு மைல் தூரத்திற்கு கடல்மீது உரிமை கொண்டாடின. சென்ற நூற்றுண்டில் குண்டு பாயும் தூரம் அதிகரித்துவிட்டதால், கடலாதிக்க வரம் பையும் அதிகரிக்க வேண்டும் என்று ஜெர்மனி கருத்துத் தெரிவித்தது. கண்டம் விட்டு கண்டம் பாயும் குண்டுகள் தோன்றியுள்ள இந்தக் காலத்தில் "குண்டு பாயும் எல்லை வரையில்" உரிமை கோரும் வாதம் செல்லுபடியாகாது. ஆயினும் கடலாதிக்க உரிமைப் பிரச்னைக்குத் தீர்வு காண் பது அவசியமாகும்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு நடந்த மகாநாட்டில் கருத்து வேற்றுமை இருந்தது என்றுலும் சமரச ஆர்வ

மும் இருந்தது. கரையிலிருந்து ஆறு மைல் தூரத்திற்கு முழு உரிமையும் அதற்கு மேல் ஆறு மைல் தூரத்திற்கு மீன்பிடிக்க உரிமையும் வழங்கலாம் என்ற யோசனையை பல நாடுகள் ஆதரித்தன. சில நாடுகளை யடுத்த கடலில் வேற்று நாட்டுப் படகுகள் பரம்பரையாக மீன் பிடித்து வருவதால், முழு ஆதிக்க உரிமைப் பகுதிக்கு அப்பாலுள்ள மீன்பிடி உரிமைப் பகுதியில் அவற்றை அனுமதிப்பதுபற்றியும் சிந்திக்கவேண்டும் என்று அமெரிக்கா யோசனை கூறிற்று.

ஏதாவது ஒரு சமரச ஏற்பாட்டைச் செய்துகொண்டு அதை 10 அல்லது 20 ஆண்டுகளுக்கு அமல் நடத்திப் பிறகு ஏற்ற முறையில் மாறுதல்களைச் செய்துகொள்ளலாம் என்று ஒரு யோசனை கூறப்பெற்றது.

## மலிவுப் புத்தகங்கள்

"அமெரிக்காவில் நூல் வெளியீட்டுத் தொழிலுக்கு என்றுமில்லாத செழிப்பு இன்று ஏற்பட்டிருக்கிறது; மலிவுப் புத்தகங்களே இதற்குப் பெரிதும் காரணம்' என்று "நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகை கூறுகிறது.

நூல் வெளியீட்டுத் தொழிலில் ஏற்பட்ட ஒரு மிகப் பெரிய காரியம் மலிவுப் புத்தகம் என்று பல்கலைக் கழக அச்சகங்களின் அமெரிக்கச் சங்கத்துத் தலைவர் கூறுகிறார்.

புத்தகம் வாசிக்கும் மக்களின் எண்ணிக்கையும் பெருகி வருகிறது.

சென்ற ஆண்டு விலையான புத்தகங்களில் கிட்டத் தட்டப் பாதி, மலிவுப் புத்தகங்களே; புத்தக விற்பனை யின் மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்கு மலிவுப் புத்தகங்களால் கிடைத்ததேயாகும். மலி வுப் புத்தகங்களுக்கு மக்களிடையுள்ள ஆதரவுக்கு இது தக்க சான்று.

சென்ற ஆண்டு வெளியான மலிவுப் புத்தகங்கள் 7,000; இவற்றின் மூன்று கோடிப் பிரதிகள் விற்பனையா யின. 1958-ம் ஆண்டின் வெளியான நூல்களை விட நூற் றுக்கு 22 பங்கு அதிகமாகச் சென்ற ஆண்டு வெளி யாயின.

மலிவுப் புத்தகங்கள் நிலைபெற்று வருவது கண்டு பதிப்பகங்கள் அவற்றின் பொருள் பற்றிக் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. ஊன்றிப் படிக்க வேண் டிய கருத்துடைய நூல்களே மற்றப் புத்தகங்களையெல் லாம் விட மிக்க லாபம் தேடித் தந்தன; இலக்கியச் சிறப்பு மிக்க நூல்கள் மட்டுமே ஒன்றரைக் கோடிப் பிரதி

கள் விலையாயின. ஆகவே, இலக்கியச் சிறப்புள்ள மூல நூல்களை வெளியிட அவர்கள் திட்டமிட்டு வருகிறார்கள்.

நன்கு விலை போன நூல்களாகப் பார்த்துத்தான் மலிவுப் பதிப்பு வெளியிட்டு வந்தார்கள், முன்பு, பின்பு, புதுமை, மர்மம், துப்பறியும் கதை முதலியவை மலிவுப் புத்தகங்களாக வெளி வரலாயின. இன்று கருத்தோடு படித்தறியத் தக்க கதைகளையும் மலிவுப் புத்தகங்களிலே காணலாம்.

பள்ளிக்கூடம், கல்லூரி, பல்கலைக் கழகம் இவற்றில் பயனாகும் பாடப் புத்தகங்கள் கூட மலிவுப் பதிப்புக் களாக வெளியாகியுள்ளன. 1958-ஆம் ஆண்டில் கல்லூரிப் பாடப் புத்தகங்களில் நூற்றுக்குப் பதின்மூன்று மலிவுப் புத்தகங்களாக இருந்தன. விற்பனையான புத்தகங்களில் பாதிக்கு மேற்பட்டவை மலிவுப் பதிப்புக்களே என்று முதன்மையான கல்லூரிப் புத்தகக் கடைகள் தெரிவிக்கின்றன. கல்வித்துறையில் புத்தகம் படித்தறிதல் முன் போலவே இனியும் முக்கியமாக விளங்கும் என்பதற்கு மலிவுப் புத்தகங்கள் உறுதியளிக்கின்றன.

"மலிவுப் புத்தகங்கள் வெளிநாடு செல்லும் அமெரிக்காவின் இலக்கியத் தூதர்கள். சிறப்பான இலக்கியப் படைப்புகள், தொழில் நுட்ப நூல்கள், தகவலளிக்கும் புத்தகங்கள், மொழிக் கல்வி நூல்கள், அடிப்படையான கருவி நூல்கள் முதலியவை நன்கு வரவேற்கப்படும் தூதர்களுக்கு ஒப்பாகும்" என்று நியூயார்க் டைம்ஸ் கூறுகிறது.

ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடிப் பிரதிகள் வீதம் அமெரிக்க மலிவுப் புத்தகங்களை விரைவில் இந்தியா வாங்கப் போகிறது என்றும் அப் பத்திரிகை குறிப்பிடுகிறது.

# ஜெட் விமானிகள் பயிற்சி

நாற்பதாயிரம் அடி உயரத்தில் வெண்புகையை விட்டுக்கொண்டு வானம் அதிர முழங்கிச் செல்கிற ஜெட் விமானத்தை ஓட்டிச் செல்வதுதான் இன்றைய இளைஞருக்குக் கவர்ச்சிகரமான, உற்சாகமூட்டுகிற செயலாகத் தோன்றுகிறது. இத்தகைய சாகசத் துணிச்சல் உணர்ச்சி மிக்க இளைஞர்கள் இந்தியாவுக்கு இப்போது தேவை.

விமானப் பயிற்சி பெறுகிறவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வந்திருக்கிற சாதாரண இளைஞர்கள்தான்; அவர்கள் அக்கறையும் ஆர்வமும் நிறைந்தவர்கள்.

ஜெட் விமானப் பயிற்சிப் பிரிவில் சேர்ந்த பிறகு, முதல் ஆறு வாரங்களும் கஷ்டமாக இருக்கும். ஜெட் விமானமோட்டிகளாகப் பயிற்சி பெறுகிறவர்கள், 36 ஆயிரம் அடி உயரக் கணக்கில் நிகழும் நிகழ்ச்சிகளைச் சமாளிக்கும் நுட்பமுள்ளவர்களாக இருக்கவேண்டும்; 400 மைலுக்கும் அதிக வேகத்தில் செல்கிற சூழ்நிலைக்கு ஒத்தபடியாக இயங்கக்கூடிய உடல் உணர்ச்சிகள் உள்ள உணர்ச்சிகள் கொண்டவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் விமான சாகசச் செயல்களில் ஈடுபடும்பொழுது அவர்களின் உடல் எடையைவிட ஆறு மடங்கு எடைப் பளுவைச் சமாளிக்கக்கூடிய திறன் படைத்தவர்களாக இருக்கவேண்டும். விமானத்தை எளிதாக ஓட்டிவிடலாம் என்று இளைஞர்கள் நினைக்கலாம்; ஆனால் அது தன்னால்

முடியும் என்பதை அவர்கள் நடைமுறையில் நிரூபித்துக் காட்டியாகவேண்டும்.

ஆறு வாரப் பயிற்சியில் ஓய்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. உடற்பயிற்சி, விளையாட்டுக்கள், இரவில் சாப்பிடுவது, பயிற்சி போதனைகள் ஆகிய நிகழ்ச்சிகள் இடைவிடாமல் நிகழ்ந்துகொண்டே இருக்கும். ஜெட் விமானிக்கு இருக்கவேண்டிய தகுதிகளில் ஒழுங்குக் கட்டுப்பாடும் நல்ல உடற்கட்டும் முக்கியமானவை. வாம்பையர் விமானங்களில் பயிற்சி அளிப்பதோடுகூட, விமானத்தைத் தரையிலிருந்து கிளப்புவதற்கு முன்னுள்ள பரிசோதனைகளையும் விமானிக் கூண்டுப் பயிற்சி (காக்பிட் டிரில்) ஜீவாதாரமான உடல் கூறு விளைவுகள்; கண்ணைக்கட்டிக்கொண்டு கூண்டுக்குள் நடவடிக்கைகளில் ஈடுபடுவது பற்றிய சோதனைகளும் நடத்தப்பெறுகின்றன. மிகவும் கஷ்டமான சூழ்நிலைகளில் விமானிகள் துரிதமாகவும் சரியான முறையிலும் செயல்படும்படி பார்த்துக்கொள்ள இப்பயிற்சி அவசியமாகும்.

பயிற்சியின்போது, பயிற்சியின் அளவுத் தரத்துக்கு முழுக்க ஒத்துவராமல் சற்று தரம் குறைந்தவர்களாய் உள்ளவர்களும் இருப்பார்கள். அவர்கள் போக்குவரத்து விமானங்களில் விமானிகளாகவோ அல்லது நாவி கேட்டர்களாகவோ பதவி ஏற்பார்கள்; மீதியுள்ளவர்கள் விடியுமுன் எழுந்து; விமானமோட்டுவது சம்பந்தமான தகவல்களை அதிகாலையிலேயே கேட்டுத் தெரிந்து சூரியோதயத்தின்போது விமானத்தில் பறந்து பயிற்சியைத் தொடங்கிவிடுவார்கள்.

அவர்கள் நாள் முழுக்கப் பல தடவை விமானங்களில் ஏறிப் பறப்பார்கள். விமானப் பயிற்சியாளரில்

பலரும், விமானங்களில் சாதாரணமாகப் பறப்பது, சாகசச் செயல்கள், கண்ணுல் பார்க்காமல் கருவிகளின் துணைக்கொண்டே இலக்குத் தெரிந்து பறப்பது ஆகிய முறைகளில் நாள் முழுவதும் பயிற்சி பெறுகின்றனர்.

ஆறு மாதப் பயிற்சிக்குப் பிறகு அவர்கள் உயர் தரப் பயிற்சியை முடித்துக்கொண்டு பயன்துறைப் பயிற்சியில் சேருகின்றனர். இந்தப் பிரிவிலுள்ள பயிற்சி மிகவும் உயர்தரமான பயிற்சியாகும். யுத்தப் பயிற்சிகள், யுத்த தந்திரப் படை வகுப்பு அணிப் பயிற்சி, பாம்பு போல் சரசரவென்று உச்சிக்குப் பறந்து ஏறுவது, விமானியின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட முறையில் விமானத்தைக் கீழ் ஸ்தானத்துக்கு இறக்கிவருவது ஆகிய நடவடிக்கைகளில் பயிற்சியளிக்கப் பெறும். விமானங்களுக்கிடையேயான "சினி படப் பயிற்சியும்" நடைபெறும். அதாவது, விமானப் பயிற்சி பெறுபவர் தம் விமானத்தில் வைக்கப்பெற்றுள்ள புகைப்படக் கருவி மூலம் பயிற்சியாளர் விமானத்தைப் படம் பிடிக்க வேண்டும்; அதாவது எதிரி விமானத்தை எவ்வளவு குறியாகத் தாக்க அவருக்கு முடியும் என்பதை அளவிட்டறியலாம்.

இவ்விதமான பயிற்சிகளுக்குப் பிறகு இன்னும் மிகவும் முக்கியமான பயிற்சியில் அவர்கள் ஈடுபடுவார்கள். அது உண்மையான பீரங்கிக் குண்டு சுடும் பயிற்சியாகும். விமானத்தில் உயர்மட்டத்துக்குப் பறந்து சென்று, அங்கிருந்துகொண்டு இலக்குகளை நோக்கிக் குண்டுகளை வீசவேண்டும்; ராக்கெட்டுகளினுலும், முன் பக்கத்திலுள்ள பீரங்கிகளினுலும் சுடவேண்டும். இந்தப் பயிற்சியில் விமானம் முழுவதையுமே ஒரு துப்பாக்கியாகப் பாவிக்கவேண்டும். பீரங்கிக் "கண் வைக்கும்" பகுதியா

வது தரையில் "பொட்டுப் போல்" தெரிகிற இலக்கின்மீது பதியும் விதத்தில் விமானத்தை ஓட்டவேண்டும். இந்த முக்கியமான தருணத்தில், கால், கை, கண் முதலிய உறுப்புகள் எல்லாம் ஒன்றுபட்டுச் செயல்படவேண்டும். அதுமட்டுமல்ல, கழுகைப்போல, கூர்மையான பார்வையுடன், இலக்கை நோக்கிப் பாயவேண்டும்.

இத்தகைய போர்க்களப் பயிற்சி பெற்ற பிறகு அவருக்கு விமானிக்கான "விங்குகள்" (இறக்கைச் சின்னம்) வழங்கப்பெறுகின்றன. அதன் பின் அவர் சண்டை விமான, ஸ்குவாட்ரன் பிரிவில் கடைசிப்படியிலுள்ள அதிகாரியாக ஆகிருர்.

# எலும்புச் சேமிப்பு நிலையம்

இந்தியாவிலுள்ள முக்கிய வைத்தியசாலைகளில் குருதிசேமிப்பு நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பிரிட்டிஷ் வைத்தியசாலைகளில் எலும்பு, தோல், கண்விழி, இரத்நாளங்கள் முதலியவற்றை உயிர்த்துடிப்புக் கெடாமுறையில் சேமித்து வைக்கிறார்கள்.

ஒரு சிறுவனின் இடது முழங்காலில் இரத்தக் கட்டி தோன்றியதால் துயருற்றான். எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்த்தபோது முழங்கால் எலும்பின்மீது சதை படர்ந்து கட்டி வளர்ந்திருப்பதாகத் தெரிந்தது. பூச்சு மருந்து அல்லது கீறிவிட்டுக் குணப்படுத்தக்கூடிய நோய் அல்ல இது என்று டாக்டருக்குத் தெரிந்தது. கட்டி எலும்பிலிருந்து கிளைத்திருப்பதால் எலும்பின் நிலையைத் தெரிந்துகொள்ள அவர் விரும்பினார். தசையை மரத்துவிடச் செய்யும் மருந்தைச் செலுத்திவிட்டு, கட்டியில் சிறு துளையிட்டு, எலும்பின் பரப்பைச் சேதித்து, சோதனைக்கு அனுப்பினார். சோதனைக் கூடத்திலிருந்து பதில் கிடைக்கும் வரையில் சிகிச்சை செய்ய முடியாது. ஆகையால் கட்டிமீது மருந்து தடவியதுடன், கால் அசங்காமலிருப்பதற்காக, சீமை மண் பூச்சுப்போட்டார்.

சோதனை அறிக்கையிலிருந்து அது எலும்பைத் தாக்கும் ஒருவகைக் கட்டி, ஆனால் ஊறு விளைவிக்கும் அளவுக்கு வளர்ச்சியடையவில்லை என்றும் தெரிந்தது. டாக்டர், சிறுவனின் காலை, மீண்டும் ஒருமுறை எக்ஸ்ரே

படம் பிடித்துப் பார்த்தார். கட்டி பெரிதாகி, எலும்பில் புரைஓடியிருந்தது. அறுவை வைத்தியம் செய்வது அவசியம் என்று தெரிந்தது. ஆனல் ஒரு சிக்கல் குறுக்கிட்டது. முழங்காலில் டிபியா, பிபுலா என இரண்டு எலும்புகள் உண்டு. டிபியாவில் நடுப்பகுதியில் கட்டி வளர்ந்திருந்தது. கட்டி தோன்றியுள்ள பகுதியை வெட்டிவிட்டு இரு துண்டு எலும்புகளையும் இணைத்துவிடலாம். ஆனல் அதன் நீளம் குறுகிவிடும். முழங்காலிலுள்ள இரு எலும்புகளில் ஒன்று நீளமாகவும் ஒன்று குட்டையாகவும் இருந்தால் சிகிச்சை வெற்றி பெற்றி பெற்றாலும் கால் ஊனமாகிவிடும். இச்சிறுவன் மற்றச் சிறுவர்களைப்போல நடக்க வேண்டுமானல், டிபியா எலும்பில் புரையோடிய பகுதியை அகற்றிவிட்டு, அதே நீளமுள்ள வேறு ஓர் எலும்பை ஒட்டவைக்கவேண்டும்.

டாக்டர், சிறுவனுக்கு ஒட்டுக்சிகிச்சை செய்ய ஏற்பாடுகளைச் செய்தார். எலும்புச் சேமிப்பு நிலையத்திலிருந்து, தேவையான அளவுள்ள எலும்பை வரவழைத்தார். டிபியா எலும்பில் புரையோடிய பகுதியை வெட்டி எறிந்துவிட்டு அதே அளவுக்குப் புது எலும்பை நறுக்கிப் பொறுத்தி, தையல் போட்டார். எலும்புகள் இசை சேர்ந்து ஒட்டிக்கொள்ளும் வரையில் கால் அசங்காமலிருக்கவேண்டும். ஆகையால் கால்மீது கனமான சிமை மண் பூச்சுப்போட்டார். ஒட்டு எலும்புமீது திசுக்கள் வளர்ந்து மூடிக்கொண்டால் காலுக்கு வலுவேற்பட்டுவிடும்.

சிறுவன் அதிருஷ்டசாலி. அவன் சிகிச்சைபெற்ற வைத்தியசாலையில் எலும்பு சேமிப்பு நிலையம் இருந்தது. தேவையான எலும்பும் கிடைத்தது. பிரிட்டனில் பெரிய

வைத்தியசாலைகளில் எலும்புச் சேமிப்பு நிலையம் உண்டு என்றாலும், 'எலும்புக்கொடை' தேவைக்கேற்றபடி இல்லை. உயிர்த்துடிப்புள்ள எலும்புகளை நீண்ட காலத்திற்குக் கெடாமல் சேமித்துவைக்க முடியாது. இப்போது உறைபனிப் பெட்டிகளில் எலும்புகளைச் சேமித்து வைக்கிறார்கள். ஒரு டாக்டர், இன்ன நாளில், இன்ன அளவுள்ள ஓர் எலும்பு தேவை என்று, எலும்புச் சேமிப்பு நிலையத்திற்குத் தெரிவித்தால், அந்த நாளில் எலும்பை அனுப்பச் சேமிப்பு நிலையத்தார் ஏற்பாடு செய்வார்கள்.

பிரிட்டனில் எலும்பு ஒட்டு வைத்தியத்தால் பலருக்கு வாழ்வு அளிக்க முடிகிறது. ஆனால் தேவைக்கேற்றபடி ஒட்டு எலும்புகள் கிடைப்பதில்லை. பாரிச வாயு, இளம் பிள்ளைவாதம் முதலிய நோய்களால் கால் சூம்பியவர்களுக்கும் வேறு வகைகளில் ஊனமடைந்தோருக்கும் எலும்பு ஒட்டு சிகிச்சையளிப்பது பற்றி வைத்திய நிபுணர்கள் சோதனைகளை நடத்தி வருகிறார்கள். எலும்புகளைக் கொடையாகப் பெறுவது எளிதல்ல. எதிர்காலத்தில் சாலை விபத்துக்களில் சிக்கி உயிரிழக்கும் இளைஞர்களின் எலும்புகளைச் சேகரித்துச் சேமித்துக்கொள்ளச் சட்டத்தின் உதவி கிடைக்கலாம். அதனால் முடவனுக்கு நடக்கும் பேறு கிட்டும்; ஊனமுற்றவர்களுக்கும் நன்மை கிடைக்கலாம்.

# ஜெர்மனியில் தென்னிந்திய மொழி ஆராய்ச்சி

வால்டர் லீபர்

சமயம், தத்துவம் இலக்கியம் ஆகிய துறைகளில் பாரத நாட்டுக்குள்ள தொன்மையான மரபு எப்போதுமே ஐரோப்பிய அறிஞர்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்து, தீவிர ஆராய்ச்சிக்கு ஒரு தூண்டு கோலாகவும் இருந்துவந்திருக்கிறது. பாரதநாடு பற்றிய ஆராய்ச்சி என்பது மேற்குநாடுகள் பலவற்றின் கல்வித்துறையில் முக்கியமானதொரு பிரிவாகிவிட்டது. பாரதநாட்டின் புராதனப் பண்பாட்டின் சம்ஸ்கிருத திராவிட அம்சங்களில் ஜெர்மனி நெடுங்காலமாகவே இடைவிடாது ஆராய்ச்சி நடத்தி வந்திருக்கிறது. மிகவும் நுட்பமான ஆராய்ச்சி இது. உலகப் புகழ்மிக்க ஜெர்மன் கவிஞர் கெதே, காளிதாஸனின் "சாகுந்தலம்" நாடகத்தை அதன் அசல் வடிவில் படித்து அனுபவிப்பதற்காகத் தமது அறுபதாவது வயதில் சம்ஸ்கிருத மொழியைக் கற்ருர்; சாகுந்தலத்தின் பேரழகை நுகர்ந்துவிட்டு அவர் ஆனந்தக் கூத்தாடினர். வேத இலக்கியத்தைக் காட்டிலும் ஆழ்ந்த கருத்துள்ள ஓர் இலக்கியத்தைத் தாம் கண்டதேயில்லை என்று புகழ்மிக்க பாரத ஆராய்ச்சிப் பேரறிஞர் மாக்ஸ்மூல்லர் வன்மையுடன் கூறியதை உலகம் அறியும்.

ஆனல், சம்ஸ்கிருதப் பண்பாட்டை வெகுவாகப் பாராட்டுவதற்கும் முன்னுலேயே ஜெர்மன் பேரறிஞர்கள், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு ஆகிய

JL
ஜை11,ல 44KM
N60.17.1
143837

மொழிகளின் பிறப்பிடமான தென்னிந்தியாவின் சிறப்பைக் கண்டு கொண்டு விட்டார்கள். பாரத நாட்டின் பழம்பெரும் மரபின் மற்ற அம்சங்களுடன் இரண்டறக் கலந்துவிட்ட தென்னிந்தியா, நாடுமுழுவதன் தத்துவ, ஆத்மீக அமைப்புக்கும் ஓர் அடிப்படையாக விளங்குகிறது.

1616ஆம் ஆண்டில் நாலாவது கிறிஸ்டியான் என்னும் டென்மார்க் மன்னர் டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஒன்றை ஸ்தாபிப்பதற்கு அனுமதி வழங்கினுர். அக்காலத்தில் டென்மார்க் தேசத்துக்கு ஜெர்மனியுடன் பலவிதத் தொடர்புகள் இருந்தன; ஏனென்ருல் அந்நாளில் டென்மார்க் மன்னர்கள், ஜெர்மனியின் ஸ்லெஸ்விக் பகுதியின் டியூக் பதவியையும் வகித்து வந்தார்கள். நாலாவது கிறிஸ்டியான் மன்னர் கடலோர நாடுகளின் வட்டாரத்தில் உயர் அதிகாரம் பெற விரும்பினுர். அப்போது இலங்கையில் கண்டி மன்னருக்குப் போர்த்துகீசியருடன் சில தகராறுகள் இருந்ததால் டேனிஷ் மன்னர் அந்த நிலைமையைத் தமது நோக்கத்துக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார். கண்டி மன்னனுக்கு உதவியளிப்பதற்காக அவர் அனுப்பிவைத்த டேனிஷ் படைக்கப்பல் அணி, சண்டையில்தோற்றுபோய்விடவே அந்த அணியைச் சேர்ந்த டேனிஷ்காரர்கள் தப்பியோடித் தஞ்சாவூருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே தஞ்சை மன்னர் அவர்களை அன்புடன் வரவேற்ருர். ரகுநாத நாயக்கர் என்னும் அந்த மன்னர் டேனிஷ்காரர்களுக்குக் கடற்கரையில் தரங்கம்பாடி என்னும் சிறு கிராமம் ஒன்றைக் கொடுத்தார். அப்போது பதினைந்து சதுரமைல் பரப்பேகொண்டிருந்த தரங்கம்பாடி பின்னர் நன்கு விரிவடைந்தது.

## கையெழுத்துச் சுவடிகள்

பார்தொலோமியஸ் ஸீகென்பால்க் என்னும் பெரியார் 1706ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஒன்பதாம் தேதியன்று தரங்கம்பாடி போய்ச் சேர்ந்தார். ஜெர்மன் அறிவுச் சாதனையின் வரலாற்றில் அத்தினம் ஒரு முக்கியமான நாள். ஏனென்றால் தமிழ் ஆராய்ச்சியை ஆரம்பித்த முதல் ஜெர்மனியர் ஸீகென்பால்க்தான். அவர் கையெழுத்துச் சுவடிகளைச் சேகரித்து, தமிழர்களின் ஆத்மீக மரபுகளை அறிந்துகொள்ள முயன்றார். ஸீகென்பால்கின் அறிவுடமையின் ஆழத்தை முதலாவது தமிழ் இலக்கணத்திலும், தென்னிந்தியத் தேவதைகளின் வரலாற்றிலும், கிறிஸ்துவ நூல்களின் தமிழ்மொழி பெயர்ப்புக்களிலும் காணலாம்.

ஸீகென்பால்கின் மிகப் பெரியநூல் மலபார் தேவதைகளின் வரலாறு பற்றியது. இதை அவர் 1713ஆம் ஆண்டில் எழுதிமுடித்தார். தென்னாட்டுத் தெய்வங்களின் முதலாவது பொது வர்ணனை இந்த நூலில்தான் வெளிவந்தது; இந்துப் பண்டிகைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் இந்நூல் விளக்கியது.

பார்தொலோமியஸ் ஸீகென்பால்க் எழுதிய இன்னொரு நூல், பாரதநாடு பற்றிய ஆராய்ச்சியில் ஓர் அமர இலக்கியமாகும்; முதலாவது தமிழ் இலக்கணமான இது லத்தீன் மொழியில் எழுதப்பெற்றது.

## ஜெர்மன் அறிஞர்களின் முதல் நூல்கள்

தரங்கம்பாடி, நெடுங்காலத்துக்கு, பாரதநாடு பற்றிய ஆராய்ச்சிக்கு ஒரு கேந்திரமாக விளங்கி வந்தது. பார்தொலோமியஸ் ஸீகென்பால்கையடுத்து ஜே. பி. பேப்ரிகிஸ் என்னும் இன்னொரு பெரியார் வந்தார். அவர்

1779-ஆம் ஆண்டில் "மலபார்-ஆங்கில அகராதி" என்ற ஒரு நூலைத் தொகுத்துத் தந்தார். 9000 வார்த்தைகளைக் கொண்ட இந்த அகராதியில் வழக்குச் சொற்றொடர்கள் பல இருந்தன. இந்த அகராதிதான் பிற்காலத்தில் டாக்டர் ராட்லர், டாக்டர் வின்ஸ்லோ ஆகிய அறிஞர்களின் நூல்களுக்கு அடிப்படையாக அமைந்தது.

டாக்டர் ராட்லரின் தமிழ்-ஆங்கில அகராதி 1834 ஆம் ஆண்டில் தொகுக்கப்பெற்றது. இதையடுத்து 1836 ஆம் ஆண்டில் ரேனியஸ் தமிழ் இலக்கணம் எழுதினார். 1855 ஆம் ஆண்டில் க்ரோல் என்பவர் தமிழ்மொழிபற்றி ஒரு நூல் எழுதினார்.

தமிழ் மொழி பற்றிய கடைசி ஜெர்மன் நூல், இரண்டாவது உலகப்போர் நடந்துகொண்டிருந்தபோது வெளியாயிற்று. ஹெர்மன் பெய்தான் என்னும் அறிஞர் எழுதிய "தமிழ் மொழி இலக்கணம்" என்னும் அந்த நூல் 1943ஆம் ஆண்டில் லீப்ஸிக் பட்டணத்தில் வெளியிடப் பெற்றது.

தென்னிந்திய விஷயங்கள் பற்றி எழுதப்பெற்று ஓரளவு புகழடைந்திருக்கும் ஜெர்மன் நூல்களில் பெரும்பாலானவை திராவிடப் பெரும் பிரச்னைகளையே முக்கியமாய்க் குறிப்பிட்டன. "திராவிடர்கள் எங்கிருந்து வந்தார்கள் ஆதியில்?" என்ற கேள்விக்கு இன்னமும் சரியான விடை தெரியவில்லை. இதுபற்றிய ஆராய்ச்சியானது அறிஞர்களுக்கு உவகை யூட்டும் ஓர் அம்சமாக இன்னமும் இருந்து வருகிறது. முன்பு ஒரு சமயம் அடையாறு நூல் நிலையத்தின் பொறுப்பதிகாரியா யிருந்தவரும் சமீபகாலம் வரை கீல் பல்கலைக் கழகத்தின் சம்ஸ்கிருதப் பேராசிரியராயிருந்தவருமான டாக்டர் ஆட்டோஷ்ரேடர்

திராவிட மொழிகள் பற்றிப் பல ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார்.

ப்ரீட்ரிக் ராக்கெட் என்னும் ஜெர்மன் அறிஞரையும் தமிழ்நாடு வெகுவாகக் கவர்ந்தது. அவர் ஒரு கவிஞரும் கூட. கீழைநாட்டுப் பண்பாட்டில் ஜெர்மனியருக்கு 19 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அக்கறையால் உந்தப் பெற்று அவர் சம்ஸ்கிருதக் கலாசாரத்தின் பழஞ்சிறப்பைப்பற்றி ஆழமாக ஆராய்ச்சி நடத்தினார். தமிழ் மக்களின் இலக்கியப் பண்புகளையும், மொழிப் பண்புகளையும் ஆராய்ந்தறியவும் அவர் முயன்றார். தாமே சொந்த முறையில் தமிழ் அகராதி ஒன்று தயாரிக்கும் வேலையை அவர் 1862ஆம் ஆண்டு வரை தொடர்ந்து செய்து வந்தார்.

• திராவிட மரபுகள் பற்றிய ஜெர்மன் ஆராய்ச்சி, தெலுங்கு, மலையாளம், துளு, கன்னடம் ஆகிய மற்ற மொழிகளையும் விடவில்லை. தெலுங்கு மொழியில் முதன் முதல் ஆராய்ச்சி நடத்திய ஜெர்மன் அறிஞர் ஜே. ஸி. எர்ப் ஹெயர் என்பவர்; அவர் 1842ஆம் ஆண்டு குண்டூருக்கு வந்தார். அங்கே அவர் சமய நூல்கள் பலவற்றை எழுதினார்.

## மலையாளத்தில் ஆராய்ச்சிகள்

மலையாள மொழியில் முதன் முதலில் ஆராய்ச்சி நடத்தியவர், ஜோஹான் ஏர்னஸ்ட் ஹாங்ஸ்லெடன் என்னும் பேரறிஞர். சம்ஸ்கிருத மொழியின் மிகச் சிறந்த ஜெர்மன் அறிஞர் இவர் என்று புகழ்மிக்க மொழி வல்லுநர் ஜோஹான் பிலிப் வெஸ்டின் பாராட்டியிருக்கிறார். "இவரோடு இன்றுவரை ஐரோப்பியர் எவருமே போட்டியிட்டு வென்றதில்லை" என்று அந்த மொழி வல்லுநர் புகழ்ந்துள்ளார். ஜோஹான் ஏர்னஸ்ட் ஹாங்க்ஷ லெட

னின் பெயர் கேரளத்தில் அனைவராலும் புகழ்ப்பெற்ற பெயராகும். இவர் மலையாள மொழி இலக்கண நூல் ஒன்றை எழுதியிருப்பதுடன், அகராதி ஒன்றையும் தொகுத்திருக்கிறார்.

மொழிவல்லுநர் ஜோஹான் பிலிப் வெஸ்டின் ஓர் ஆஸ்திரியப் பாதிரியர். அவர் 1774ஆம் ஆண்டில் மலபாருக்குச் சென்று அங்கே பதினான்கு ஆண்டுக்காலம் தங்கி யிருந்தார். புதிய மொழியை அவர் வெகு எளிதில் கற்றுக்கொண்டார். சிறு சிறு துண்டுப் பிரசுரங்கள் கூட அவர் மலையாளத்தில் வெளியிட்டார்; மலையாள மொழியில் அவருக்கு அத்தனை புலமை இருந்தது. பாரத நாட்டு ஆராய்ச்சித் துறையில் ஐரோப்பா முழுவதும் அவருடைய புகழ் பரவி யிருந்தது. ஆனால், சம்ஸ்கிருத மொழி ஆராய்ச்சியில் அவர் நிகழ்த்தியிருக்கும் சாதனை பொன் எழுத்துக்ககளால் பொறிக்கவேண்டியதாகும். உண்மையில், சம்ஸ்கிருத ஆராய்ச்சி பற்றிய நூலில் அவருடைய பெயரைப் பொன்னெழுத்துக்களில் எழுதியிருக்கிறார்கள்.

## கன்னடம் துளு மொழிகளில் ஆராய்ச்சிகள்

கன்னடம், துளு மொழிகளில் ஜெர்மனியர் பெற்ற புலமையைக் குறிப்பிடும்போது, கிட்டெல் என்னும் அறிஞரின் பெயர் முதலிடம் பெறவேண்டும். அவர் கன்னடம் துளு-இரண்டு மொழிகளையும் நன்கு கற்றுக்கொண்டார். அவை யிரண்டுக்குமிடையேயுள்ள தொடர்பையும், திராவிட மொழித் தொகுதியில் அவற்றுக்குரிய ஸ்தானத்தையும் பற்றி அவர் ஆராய்ச்சி நடத்தினார். சரியானபடி நவீன முறையில் முதன் முதலாகக் கன்னட மொழி அகராதி ஒன்று தயாரித்த பெருமை கிட்டெலைச் சார்ந்தது; அந்த அகராதி 1752 பக்கங்கள் கொண்டது.

முதலாவது உலகப்போருக்குப் பிறகு ஜே. புச்சர் எழுதிய கன்னட ஆங்கில அகராதி 1923 ஆம் ஆண்டு மங்களூரில் வெளியாயிற்று. கன்னட மொழியில் புலமை பெற்றவர்களில் ஜே. ப்ரான்மெயர் என்னும் ஜெர்மானியருக்கும் முக்கிய இடமுண்டு. ஆனல் கிட்டெலின் பெரு நூல்தான் இன்னமும் ஒப்பற்றதாக விளங்குகிறது. துளுவம் என்ற பழம் பெயர் கொண்ட தென் கன்னடப் பகுதியில் மட்டுமின்றி, கர்நாடகப் பிராந்தியம் பூராவிலுமே அறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் இன்றும் கிட்டெலின் இந்த நூல்தான் மிகச் சிறந்த அத்தாட்சி நூலாக விளங்குகிறது.

# பிரிட்டிஷ் கயாணு

பிரிட்டிஷ் கயாணுவின் எதிர்காலம்பற்றிச் சிந்திக்க அண்மையில் லண்டனில் ஓர் அரசியல் மகாநாடு நடந்தது.

தென் அமெரிக்காவின் வடகோடியிலுள்ள பிரிட்டிஷ் கயாணுவின் பரப்பு 83,000 சதுரமைல். மக்கள் தொகை 539,940. பல இன மக்கள் வாழும் இந்த நாட்டில் இந்திய வமிசா வழியினர் எண்ணிக்கையே அதிகம், நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருள்கள்-சர்க்கரை, அரிசி, அலுமினியக் களிமண். இங்கு கிடைக்கும் வேறு பொருள்கள்: மாங்கனீஸ், வைரம், தங்கம், வெட்டுமரம். நாட்டின் பரப்பில் ஐந்தில் நான்கு பகுதி அடர்ந்த காட்டுப் பிரதேசம். கடற்கரையோரத்தில்தான் மக்கள் தொகை அதிகம்.

பிரிட்டிஷ் கயாணுவில் 1953 ஆம் ஆண்டில் புதிய அரசியல் திட்டம் அமலுக்கு வந்தது. வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை, இரு சட்டசபைகள், மந்திரி சபை நிர்வாகம் இவையே புதிய அரசியல் திட்டத்தின் முக்கிய அம்சங்கள். 1953ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடந்த பொதுத்தேர்தலில் பீபிள்ஸ் புரோகிரஸிவ் பார்ட்டி சட்டசபையின் 24 தேர்தல் ஸ்தானங்களில் 18 ஸ்தானங்களைக் கைப்பற்றியது. கட்சித் தலைவர் டாக்டர் செட்டி ஜகன், மந்திரி சபையை அமைத்தார். ஆறு மாதங்களுக்குப் பிறகு பிரிட்டிஷ் கயாணு அரசாங்கத்தில் கம்யூனிஸ்டு ஆதிக்கம் பெருகியதால், விபரீதங்கள் நேரக்கூடும் என்று அஞ்சிய பிரிட்டிஷ் அரசாங்கத்தார். அரசியல் திட்டத்தை நிறுத்திவைக்க முடிவு செய்தார்கள். 1957 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மீண்டும் பொதுத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலிலும் பீபிள்ஸ் புரொக்ர

ஸிவ் பார்ட்டிக்கே அதிக ஸ்தானங்கள் கிடைத்தன. அடுத்த மாதத்தில் டாக்டர் ஜகனும் அவருடைய கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்கள் நால்வரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பெற்ருர்கள்.

பிரிட்டிஷ் கயானுவில் 1961 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் புதிய அரசியல் திட்டம் அமலாக்கப் பெறும். புதிய அரசியல் சட்டப்படி, வெளிஉறவு, தற்காப்பு ஆகிய பொறுப்புக்களை பிரிட்டிஷ் அரசாங்கமே ஏற்று நடத்தும். உள்நாட்டு நிர்வாகத்தில் பூர்ண சுயாட்சி வழங்கப் பெறும். 35 தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களுள்ள சட்டசபையும், 13 நியமன உறுப்பினர்களுள்ள மேல் சபையும் நிறுவப்பெறும். சட்டசபையில் மிகுதொகையாதிக்கமுள்ள கட்சித் தலைவரைப் பிரதம மந்திரியாக கவர்னர் நியமனம் செய்வார். மற்ற மந்திரிகளையும், பிரதம மந்திரியின் ஆலோசனைக் கிணங்க, கவர்னரே நியமனம் செய்வார். போலீஸ், உள்நாட்டுப் பாதுகாப்பு ஆகிய துறைகளை தேர்ந்தெடுக்கப்பெறும் மந்திரியின் பொறுப்பில் விடவேண்டும். என்று பிரிட்டிஷ் கயானு தூதுக் கோஷ்டியினர் கோரினர்கள். பிறகு, இவற்றை நாளாவட்டத்தில் மாற்றிக்கொள்ளலாம் என்ற யோசனையை ஏற்றுக்கொண்டார்கள்.

புதிய அரசியல் திட்டத்தின்கீழ் பொதுத் தேர்தல் நடந்து இரண்டாண்டுகளுக்குப் பிறகு, பிரிட்டிஷ் கயானு சட்டசபை பூர்ண சுதந்திரம் கோரித் தீர்மானம் நிறைவேற்றினல், சுதந்திரம் வழங்குவதற்கு நாளைக் குறிப்பிடுவதுபற்றி ஆலோசிக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஓர் மகாநாட்டை நடத்துவார்கள்.

# அமெரிக்காவும் இந்தியாவும்

[அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதர் ஸ்ரீ எம். ஸி. சாக்ளா, நெப்ராஸ்காப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய ஓர் உரையின் சாரம்]

நமது இரு நாடுகளுக்குமிடையே பெருமளவுக்கு ஒற்றுமை இருக்கிறது. அமெரிக்காவிலும் சரி, இந்தியாவிலும் சரி, அதிகப்படியாக மக்கள் இந்த உண்மையை உணர்ந்து வருகின்றனர். நமக்குள் கருத்து வேற்றுமை கிடையாது என்று கூறுவது தவருகும். மிகச்சிறந்த நண்பர்களிடையிலும் கூட ஒரே மாதிரியான குணங்களோ வாழ்க்கை பற்றிய குறிக்கோளோ இருப்பதில்லை.

ஆனால் முக்கியமான விஷயம் என்னவென்றுல், ஒரு நாட்டின் அரசியல் கட்டுக்கோப்பையும் அதன் அரசியல் கோட்பாட்டையும் உருவாக்கும் ஜீவாதாரமான அடிப்படை விஷயங்களில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே குறிப்பிடத்தக்க ஒருமைப்பாடு உண்டு என்பதாகும்.

ஜனாதிபதி ஐஸன்ஹாவர் அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது அவருக்கு ஏன் மிகப் பிரமாத வரவேற்புக் கிடைத்தது? வரவேற்பு மிகமிகப் பிரமாதம் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. புது டில்லியில் அப்போது நான் கண்ட ஜனத் திரள்களைப் போல் முன்பு ஒருபோதும் கண்டதில்லை. இத்தகைய உண்மையான, மனப்பூர்வமான, உற்சாகத்தையும் நான் இதற்கு முன் கண்டதில்லை. ஒரு நாட்டின் மக்கள், தங்கள் நாட்

டிற்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு பிரமுகர் ஒருவருக்கு இவ்வளவு அன்பான வரவேற்பு அளித்த வேறு ஒரு சந்தர்ப்பத்தையும் நான் பார்த்ததேயில்லை.

இந்திய மக்களில் எல்லா வகுப்பினராலும், பிரிவினர்களாலும் போற்றிப் பேணப்படும் ஒரு கருத்துக்கு ஜனாதிபதி ஐஸன்ஹாவர் பிரதிநிதியாக இருக்கிறார் என்ற உண்மைதான் இந்த வரவேற்புக்குக் காரணம். ஜனாதிபதி ஐஸன்ஹாவர் அமைதிப் பணிக்காக மேற்கொண்டார் இந்தப் பிரயாணத்தை. அமைதி என்பது எங்களுக்கு வெறும் அரசியல் கருத்தை விட மிக அருமையானது. எங்களுடைய சித்தாந்தத்திலும் மதத்திலும் இது ஊறியிருக்கிறது.

எங்களுடைய வெளிநாட்டுக் கொள்கை இந்தக் கருத்தைத்தான் ஆதாரமாகக் கொண்டது. இந்தக் கருத்தைச் சரிவர அறிந்து உணர்ந்து கொண்டு விட்டால், இந்திய அரங்கில் விளக்க முடியாதவை போல் காணப்பெறும் பல விஷயங்கள் தெளிவாகி விடும், உணரக்கூடியவையாகிவிடும்.

கீழ்த்திசை (நாடு) கீழ்த் திசைதான் மேல் திசை மேல் திசைதான்; இரண்டும் ஒருக்காலும் சந்திக்க மாட்டா என்று கிப்ளிங் ஒரு சமயம் சொன்னார். இந்தியாவையும் அமெரிக்காவையும் விட இந்தியாவையும் பிரிட்டனையும் பற்றித்தான் அவர் அதிகமாக நினைத்திருக்க வேண்டும். இந்தியாவையும் இங்கிலாந்தையும் பற்றிக்கூட கிப்ளிங்கின் இனவெறி அவநம்பிக்கைச் சித்தாந்தம் தவறு என்பது நிரூபிக்கப் பெற்று விட்டது. இங்கிலாந்து இந்தியாவில் தனது சாம்ராஜ்யத்தை விட்டு விட்டது. இன்று இந்தியா காமன்வெல்த்தில் பெருமையுள்ள மதிப்புக்குரிய

ஒரு அங்க நாடாகத் திகழ்கிறது. சுதந்திரத்திற்கு முன் இருந்ததை விட இப்பொழுது இந்த இரு நாடுகளுக்கு மிடையே அதிகத் தொடர்புகள்—பண்பாட்டுத் துறைத் தொடர்புகள், வர்த்தகத்துறைத் தொடர்புகள், இன்னும் இதரத் தொடர்புகள் ஏற்பட்டு வருகின்றன.

ஆனால் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே எத்தகைய அரசியல் முட்டுக்கட்டைகளோ அல்லது உயர்நிலை கீழ்நிலை மனோபாவமோ, வெளிப்படையாக இல்லாத அகந்தையோ ஒருக்காலும் இருக்கவில்லை. இந்த அகந்தை, ஒருநாடு, ஆளும் நாடாகவும் மற்றது ஆளப்படும் அடிமை நாடாகவும் இருப்பதால் ஏற்படக்கூடியது. இந்திய மக்களின் சுதந்திரப் போருக்கு அமெரிக்க மக்கள் எப்பொழுதும் பரிவு காட்டி வந்தனர். இந்திய அரசியல் தலைவர்களுக்குத் தங்களுடைய கருத்துக்களை வெளியிட இந்த நாட்டில் எப்பொழுதும் வாய்ப்புக் கிடைத்தது. இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்கு இங்கு பல சங்கங்கள் அவற்றின் தார்மிக ஆதரவைக் கொடுத்து வந்தன. ஏனெனில் அடிமை நாடாக இருப்பது என்ன வென்பது அமெரிக்காவுக்குத் தெரிந்த விஷயம்.

இந்தியாவும் அமெரிக்காவும் அடிமை நாடுகளாக இருந்தன; இரண்டும் சுதந்திரம் பெற்றன. விடுதலையடைவதற்குமுன் இரண்டும் பல ஆண்டுகள் போராட வேண்டி வந்தன; இவ்வுண்மைகள் நம் இரு மக்களிடையே நிரந்தரமான பிணைப்பை உண்டு பண்ணியுள்ளன. தான் சுதந்திரம் பெற்றதுடன் பிறர் சுதந்திரத்தை எப்பொழுதும் ஆதரித்து வந்த நாடு அமெரிக்கா. சுதந்திரம் பெற அடிமை நாடுகளுக்கு உதவி செய்த நாடு அமெரிக்கா. உங்களுடைய சுதந்திரப் பிரகடனத்தை நாங்கள் நன்றாக அறிவோம். அது அடிமை நாடுகள் அனைத்துக்கும் உள்ளொளி

ஊட்டும், ஜெபர்ஸின் எழுத்துக்களும், சித்தாந்தமும் நாங்கள் நன்கு அறிந்தவை. ஆப்பிரகாம் லிங்கன் எழுத்தை நாங்கள் மிக உன்னிப்பாகப் படித்துள்ளோம். சுதந்திரத் தத்துவத்தை அவர் மேலும் உயர்த்தினர்: சுதந்திரம் அனைவருக்கும் உரித்தானது. ஒரு நாட்டைச் சுதந்திர நாடாக்கினல் மட்டும் போதாது. அந்த நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு மனிதனையும் சுதந்திர மனிதனுகச் செய்யவேண்டியது அவசியம்.

சலுகை என்பது சமுதாயம், ஜாதி மதம், அல்லது ஒருவருடைய தோலின் நிறம் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டிருக்கும் பட்சத்தில், அது மிகக் கெடுதலான, தீமையான விஷயமாகும். நன்மை பயக்கக்கூடிய ஒரே ஒரு சலுகை, தகுதியிலிருந்துதான் ஏற்படுகிறது. இத்தகைய சலுகைதான் இறுதியில் நிலைத்து நிற்கக்கூடியது. இதனை மக்கள் இப்பொழுது அதிகமாக உணர்ந்து வருகின்றனர். ஒரு குறிப்பிட்ட இனத்தைச்சேர்ந்தவர் என்ற காரணத்திற்காக ஒருவருக்குச் சமுதாயத்தில் அவருக்குரிய இடத்தை அளிக்க மறுப்பது தவறு, அதர்மம் என்பதையும் நாம் இப்பொழுது உணர ஆரம்பித்துள்ளோம்.

லிங்கன் அடிமை முறையை ஒழித்து அடிமைகளை விடுதலை செய்தபோது, அடிமை முறையின் அரசியல், தார்மிக விளைவுகளைப் பற்றிச் சிந்தித்தார். அரசியல் விளைவுகள் என்னவென்றல், அவரே சொன்னபடி, ஒருநாட்டில் பாதி மக்கள் சுதந்திர மக்களாகவும் மீதிப் பேர் அடிமைகளாகவும் இருக்க முடியாது என்பதாகும். தார்மிக விளைவுகள் மனிதனின் மாண்பு சம்பந்தப்பட்டவை. கடவுளிடம் உங்களுக்கு நம்பிக்கை இருக்கும் பட்சத்தில், உயிரினங்கள் அனைத்தையும் அவர் சம திருஷ்டியுடனே பார்க்கிறர் என்ற நம்பிக்கையும் உங்களுக்கு இருக்கும் பட்சத்

தில், குறிப்பிட்ட நிறம் அல்லது குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த மனிதர்களே, மனிதர்களல்லாதவர்கள் என்றே அல்லது வேறு ஓர் இனம் அல்லது நிறத்தைச் சேர்ந்த மக்களுடன் உறவாடுவதற்கு அவர்கள் தகுதியற்றவர்கள் என்றே கருதும் ஓர் அரசியல் சித்தாந்தத்தை ஏற்பது மிகவும் கடினமாகும்.

உங்களுக்கு இங்கு இருந்த இதே பிரச்னை தான் இந்தியாவில் எங்களுக்கும் இருந்தது. உங்களுக்கு நீக்ரோக்கள் இருப்பதைப் போல் எங்களிடையே தீண்டாதார் என்று கூறப்படுபவர்கள் இருக்கின்றனர். நீக்ரோக்களின் அடிமை முறையை நீங்கள் ஒழித்தீர்கள், அரசியல் பூர்வமான உரிமைகளை அவர்களுக்கு வழங்கினீர்கள். அவர்களை இந்த நாட்டின் பிரஜைகளாக்கினீர்கள். நாங்களும் இதையே செய்துள்ளோம். தீண்டாமையை நாங்கள் ஒழித்தோம். எங்களுடைய அரசியல் அமைப்பின் கீழ் அவர்களுக்கு மற்றப் பிரஜைகள் அனுபவிக்கும் ஜீவாதார உரிமைகளை வழங்கினோம். நாங்கள் இன்னும் ஒரு படி மேலே சென்றுள்ளோம். இன்று எங்களுடைய இந்திய மந்திரி சபையில் தீண்டாதார் ஒருவர் மந்திரியாக இருக்கிறார். அண்மையில்தான் ஒரு ராஜ்யத்தின் முதலமைச்சராகத் தீண்டாதார் ஒருவர் நியமனம் பெற்றிருக்கிறார். இது உங்களுடைய ஒரு ராஜ்யத்தின் கவர்னர் நீக்ரோவாக இருப்பதைப் போலாகும்.

ஆனால் உங்களுடையதைப் போலவே எங்களுடைய பிரச்னையும் முற்றிலும் தீர்ந்தபாடில்லை. சமுதாய அமைப்புக்குள் நீக்ரோக்கள் அல்லது தீண்டாதார்களைச் சட்டப் பூர்வமாக ஐக்கியப்படுத்துவது ஒரு விஷயம்; ஆனால் கட்டாயமின்றித் தானாகவே சமுதாயத்தில் ஐக்கியமேற்படுவது முற்றிலும் வேறு விஷயம். இந்நிலை ஏற்பட நாங்கள் மிகக் கடுமையாக உழைக்கின்றோம்.

அரசாங்கத்துக்கும் மதத்திற்கும் அடியோடு சம்பந்த மில்லாமல் நாங்கள் வைத்திருக்கிறோம். மதச் சார்பற்ற சமுதாயம் என்று அதை அழைக்கிறோம். ஜாதிக் கோட்டைகளை நாங்கள் மிக வேகமாகத் தகர்த்து வருகிறோம். நீங்களும் இதையேத்தான் செய்கிறீர்கள். ஆனால் பிரச்னையின் முக்கிய அம்சம் என்னவென்றால், உங்கள் அரசாங்கத்தின் கொள்கையும், எங்கள் அரசாங்கத்தின் கொள்கையும், நிறம் அல்லது இனத்தை ஆதாரமாகக் கொண்ட சலுகையை ஒழித்து விடுவதும், நமது நாடுகளில் முதல் தரப் பிரஜைகள் இரண்டாம் தர பிரஜைகள் என்ற பாகுபாடில்லாமல் செய்து விடுவதும், சமுதாயத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரியான உரிமைகளையும் சலுகைகளையும் வழங்குவதுமாகும்.

இது துரதிர்ஷ்டவசமாக, உலகின் வேறு ஒரு பாகத்தில் நிகழ்ந்து கொண்டிருப்பதற்கு முற்றிலும் மாறாக இருக்கிறது. உலகின் அந்தப் பாகத்தில் அரசாங்கமே அதனுடைய மிக முக்கிய கொள்கையாக "அபர்தீட்" என்ற இன ஒதுக்கலை ஏற்று அனுசரித்து வருகிறது. இந்த இன ஒதுக்கல் கொள்கையின்படி, சமுதாயத்தின் ஒரு சாரார் மற்ற சாராரிடமிருந்து ஒதுக்கி வைக்கப் பெற்றுத் தாழ்ந்த மக்களாகக் கருதப் பெற்று வருகின்றனர். இந்தக் கொள்கை ஒருக்காலும் வெற்றியடையாது. கடல் அலைகளை கான்யூட் மன்னரால் தடுத்து நிறுத்த முடியவில்லை. இன்னும் கம்பீரமான வரலாறு என்ற வெள்ளப் பெருக்கை எந்த அரசாங்கத்தினாலும் எதிர்த்து அணை போட முடியாது. வரலாறு என்ற வெள்ளப்பெருக்கு சமத்துவம், சுதந்திரம் என்ற திசையை நோக்கி வெகு வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. ஆப்பிரிக்காக் கண்டம் அனைத்துமே இப்பொழுது விழித்துக் கொண்டுவிட்டது; புத்துணர்ச்சி பெற்றுவிட்டது. அந்தக் கண்டத்தின்

துரதிர்ஷ்ட மக்கள் வெகு காலமாக அடக்கி வைக்கப் பெற்றுள்ளனர்.

இப்பொழுது தொடங்கியுள்ள பத்தாண்டுக் காலம், வரலாற்றில் ஆப்பிரிக்கச் சுதந்திரம் பத்தாண்டுக் காலம் என்று இடம் பெறுமென்றே நினைக்கிறேன். இதர கண்டங்களில் என்ன நடக்கிறதென்பதை இந்த நாட்டுமக்கள் பூர்ணமாக உணர வேண்டியது மிக மிக அவசியம். சுதந்திர சக்திகள் முன்னேறுகின்றன. நேசக்கரங்களைத் தேடுகின்றன இந்த சுதந்திரச் சக்திகள். மிக வலிமை மிக்க நேசக் கரங்களில் ஒன்ருக இந்த நாட்டை இந்த சுதந்திரச் சக்திகள் கருத முடியும் என்றே நம்புகிறேன்.

## ஜீவாதார உரிமைகள்

உங்களைப் போலவே, எங்களுடைய அரசியல் அமைப்பிலும் ஜீவாதார உரிமை இடம் பெற்றிருக்கிறது. எங்களுடைய அரசியல் அமைப்பு எங்கள் நாட்டின் பிரஜைகளுக்கு அவர்களுடைய ஜீவாதார உரிமைகளை வழங்கி உத்தரவாதமளிக்கிறது. உங்கள் பிரஜைகள் அனுபவிக்கும் அதே உரிமைகளைத்தான் எங்கள் பிரஜைகளும் அனுபவிக்கின்றனர். எங்கள் நீதிபதிகள் அவர்களுடைய கடமைகளைப் பொறுத்தவரை அரசாங்கத்துக்கு உட்பட்டவர்களல்லர். இங்கு உங்கள் நீதிபதிகளுக்கு இருப்பதைப் போலவே எங்கள் நீதிபதிகளுக்கும் சட்டப்படி மறு பரிசீலனை அதிகாரமும் கொடுத்துள்ளோம். இது நமது இரு நாடுகளுக்கிடையே இன்னெரு முக்கியமான பிணைப்பு.

நமது இரு நாடுகளும் உலகிலேயே இரு மிகப்பெரிய ஜனநாயக அரசாங்கங்களாகத் திகழ்கின்றன. உங்களுடைய நாடு இன்னும் அதிக சக்தி வாய்ந்தது, அதிகச்

செல்வம் படைத்தது, அதிக சுபிட்சமுடையது. எங்களுடைய நாட்டில் ஜனத்தொகை அதிகம். எங்கள் நாட்டில் நாற்பது கோடி மக்கள் வசிக்கின்றனர். உங்கள் நாட்டில் பதினேழரைக் கோடி பேர் வாழ்கின்றனர். ஆனால் நம் இரு நாடுகளிலும் வெறும் ஜனநாயக அரசியல் அமைப்புக்கள் மட்டும் இருக்கவில்லை. ஜனநாயகக் கோட்பாட்டில் நாம் நம்மைப் பணித்துள்ளோம். இந்தக் கோட்பாட்டின் முக்கிய ஷரத்து என்னவென்றால், சமூகமும் அரசாங்கமும் தனி நபருக்காகத்தான் இருக்கின்றன; தனி நபரின் அபிவிருத்தியிலும், அவருடைய சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலும்தான் அரசாங்கத்தின் மிக முக்கியமான கடமை இருக்கிறது என்பதாகும். உங்களுக்கும் சரி, எங்களுக்கும் சரி சர்வாதிகார அரசாங்கத்தில் நம்பிக்கை கிடையாது. சர்வ வல்லமை படைத்த, சர்வாதிகார அரசாங்கம் தனி நபரின் முயற்சிகளையும் தனி நபரின் அபிலாஷைகள், தனி நபரின் சுய ஆற்றல்கள், தன்னுடைய சொந்த வழியிலேயே தனக்குப் பிடித்தமான இன்பத்தை நாடும் தனி நபரின் அவா முதலியவற்றையும் நசுக்கி விடுகிறது.

ஆகையால் நாம் சுதந்திரக் களத்தில் நண்பர்களும் தோழர்களும் ஆவோம். சுதந்திர உலகைப் பற்றி மக்கள் மேலெழுந்தவாரியாகப் பேசும்போதும், அமெரிக்காவுடன் இந்திய ராணுவ முறையிலே கூட்டுச் சேராத காரணத்தால் சுதந்திர உலகம் என்பதிலிருந்து இந்தியாவை விலக்கி விட வேண்டுமென்று அவர்கள் கோரும்போதும் நான் சில சமயம் வியப்படைவதுண்டு. சுதந்திரம் என்பது கம்யூனிச எதிர்ப்பு என்று—கம்யூனிச எதிர்ப்பை ராணுவ தோரணையிலே—நீங்கள் கூறும் பட்சத்தில் ஒருக்கால் அவர்கள் கூறுவது சரியாக இருக்கலாம்.

ஆனால் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும், வெறும் எதிர்மறைப் பண்புகளுடன் ஒப்பிடுவது தவறு என்று கருதுகிறேன். ஜனநாயகமும் சுதந்திரமும் உருப் படியானவை. ஜனநாயகத்திலும் சுதந்திரத்திலும் உருப் படியான முறையிலே நம்பிக்கை கொண்ட, அதி தீவிர நம்பிக்கைக் கொண்ட, நாடுகளும் சுதந்திர உலகில் இருக் கின்றன. இத்தோரணையிலே, நமது இரு நாடுகளும் சுதந் திர உலகின் மிக முக்கிய அம்சங்கள் என்று கருது கிறேன். நம் இரு நாடுகளிடையே ஒப்பந்தம் ஏதுமில்லை. ராணுவக் கூட்டு ஒன்றுமில்லை. உங்களிடமிருந்து நாங்கள் யாதொரு ராணுவ உதவியையும் பெறவில்லை. அப்படி யிருந்தும் நமது நேச உறவும், நமது நட்பும் மிக ஆழமா னவை, நிலைத்திருப்பவை.

எங்களுடைய அரசியல் சித்தாந்தத்தை உணருவ தற்கு இந்த நாட்டு மக்களுக்குக் கஷ்டமிருக்க முடியாது. எங்களுடைய அரசியல் சித்தாந்தம் சக வாழ்வுக் கொள் கையை ஆதாரமாகக் கொண்டது. இது காந்தீயத் தத்து வமான அஹிம்சையின் விஸ்தரிப்பே. 'வாழ், வாழ விடு' என்பதுதான் எங்கள் கோட்பாடு.

கம்யூனிஸ்டு நாடுகளுடன் நாங்கள் சிநேகமாக இருப் பதற்கு கம்யூனிசத்தில் எங்களுக்கு நம்பிக்கை இருக் கிறது என்பதல்ல காரணம். இந்த உலகில் சமாதானம் நிலைத்திருப்பதற்கு ஒரே ஒரு வழி சர்வதேச நெருக்கடி களைத் தளர்த்துவதாகும். பல்வேறு நாடுகள், நிரந்தரப் பரபரப்பு நிலையிலும் யுத்தம் மூண்டுவிடுமோ என்ற அச் சம் நிறைந்த நிலையிலும் வாழ்வதைவிட, பரஸ்பரம் சமா தானமாக வாழ ஒப்புக் கொள்வதன் மூலம்தான் சர்வ தேச நெருக்கடிகளைத் தளர்த்த முடியும்.

தேவை ஏற்படும் பட்சத்தில் போராடுவதையும் விட்டுவிட்டு ஓர் ஆக்கிரமிப்பாளருக்கு எங்கள் நாட்டின் எந்த ஒரு பிரதேசத்தையும் நாங்கள் தியாகம் செய்துவிட வேண்டும் என்ற அளவுக்கு சமாதானத்தில் எங்களுடைய நம்பிக்கை ஏற்பட்டு விடவில்லை. சீனவுடன் எங்களுடைய உறவில் இந்த சித்தாந்தம் எப்படிச் செயல்படுகிறது என்பதை அண்மையில் நாங்கள் காட்டினேம். ஒரு கம்யூனிஸ்டு அரசாங்கமாக இருந்தபோதிலும் சீனவை நாங்கள் அங்கீகரித்தோம். சமாதானச் சக வாழ்வு விஷயமாக அதனுடன் ஒரு பிரகடனத்தில் கையெழுத்து இட்டோம். அது ஆக்கிரமிப்புத் தந்திரத்தைக் கையாண்டதும், கடைசி நபர் வரை, எங்கள் நாட்டின் ஒவ்வோர் அங்குலத்திற்கும், நாங்கள் போராடுவோம் என்பதைத் தெளிவுபடுத்தினேம். அதே சமயத்தில் அந்த நாட்டின் பிரதம மந்திரியுடன் பேச்சு நடத்தவும் நாங்கள் தயாராக இருந்தோம். எங்களுடைய பிரதமரும் சீனப்பிரதமரும் சந்தித்துப் பேசினர்.

உங்களுடைய பரம எதிரிகளுடன் கூட, நீங்கள் வெறுத்து ஒதுக்கி துவேஷிக்கும் எதிரிகளுடன் கூடப் பேச்சு வார்த்தை நடத்தத் தயாராக இருக்க வேண்டும் என்று காந்திஜி எப்பொழுதும் சொல்லி வந்தார். பிரிட்டனுடன் நாங்கள் போராட்டம் நடத்திய காலம் மூழுவதிலும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடன், அவர்கள் எந்தப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க அழைத்தாலும் கூட, காந்திஜி பேச மறுத்ததில்லை. இக்காரணம் பற்றித்தான் உங்கள் ஜனதிபதியின் சமீபத்திய கொள்கையை நாங்கள் முழுக்க ஆதரிக்கிறோம். பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பரஸ்பரம் சந்தித்துப் பேசவும், ஒன்று கூடி அமர்ந்து, சோர்ந்து போயிருக்கும் இந்த உலகின் நிலையைச் சீர்திருத்த வழி உண்டா என்பதைக் காணவும்

தயாராக இருக்கும் நிலைமையை அவர் உண்டாக்கியிருக்கிறார்.

பொருளாதாரத் துறையிலும் கூட, நம்மிடையே பெருமளவு ஒற்றுமை இருக்கிறது. ஒரு சுதந்திர நாடு என்ற முறையில் உங்களுடைய பெரும் வாழ்க்கையை நீங்கள் துவக்கியபோது, உங்கள் நாட்டின் அபரிமிதமான செல்வங்களும் வளங்களும் பயன்படுத்தப் பெறவில்லை. நாடு வறுமையில் இருந்தது. உங்களிடம் மூலதனம் இருக்கவில்லை. தேவையான யந்திர சாதனங்களும் உங்களிடம் இல்லை. ஆரம்பத்தில் உங்கள் நாடு ஒரு மாபெரும் விவசாய நாடாக இருந்தது. இப்பொழுது உங்களுடைய நாட்டை உலகம் இதுவரை கண்டிராத மிகப் பெரிய தொழில் வளம் மிகுந்த சமுதாயங்களில் ஒன்றாக மாற்றி விட்டீர்கள்.

நீங்கள் 150 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலையில் நாங்கள் இன்று இருக்கிறோம். எங்களிடம் அபரிமிதமான இயற்கை வளங்கள் இருக்கின்றன. தேவையான நீர்வளம், நிலவளம் இருக்கின்றன. ஆனால் எங்களுக்கு மூலதனமும் யந்திரங்களும் தேவை. நீங்களும் இதே நிலையில்தான் இருந்தீர்கள். ஐரோப்பா கொடுத்த மூலதனத்தைக் கொண்டு ஆரம்பத்தில் நீங்கள் முன்னேறினீர்கள். அப்பொழுது நீங்கள் கடனாளியாக இருந்தீர்கள். எல்லோரிடமும் கடன் பட்டிருந்தீர்கள். ஆனால், முயற்சி, முன்யோசனை, உங்கள் மக்களின் சலியா உழைப்பு முதலியவற்றினால், தொழில் மிக உச்ச அளவில் வளர்க்கப் பெற்றுள்ள ஒரு சமுதாயத்தை நீங்கள் இப்பொழுது அமைத்து விட்டீர்கள். தொழில் வளர்ச்சி உங்களுடைய நாட்டைச் செல்வம் கொழிக்கும் நாடாகச் செய்ததுடன் மட்டுமல்லாமல், கடன் கொடுக்கும் நாடாகவும் மாற்றி

யுள்ளது. உங்கள் நாடு, வெற்றிகரமாக அடைந்துள்ள சாதனையைத் தாமும் அடைய கஷ்டப்பட்டு முயலும் இதர நாடுகளுக்கும் உதவி செய்யும் நிலையில் இப்பொழுது உங்கள் நாடு இருக்கிறது. இதுவும் நம்மிரு நாடுகளுக்கிடையில் உள்ள ஒரு பிணைப்பாகும்.

இறுதிப் பரிசீலனையில், அமெரிக்க மக்கள் இந்திய ஜனநாயகத்தின் எதிர்காலத்தில் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளனர்; கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேன். இன்று உலகில் இரண்டு சித்தாந்தங்கள் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று போட்டியிடுகின்றன. சில சமயங்களில் ஒன்றையொன்று மோதிக் கொள்கின்றன. வறுமை மிக்க அபிவிருத்தியடையாத நாடு, மக்கள் அனைவரையும் அடிமைப்படுத்தாமலும், அரசாங்கம் சர்வாதிகாரத்தையும் மேற்கொள்ளாமலும், தனி நபர்கள் சுதந்திரத்தைத் தியாகம் செய்யாமலும், பொருளாதார முன்னேற்றம் அடைவது சாத்தியமல்ல என்று ஒரு சித்தாந்தம் போதிக்கிறது. மற்ற சித்தாந்தம், ஜனநாயகக் கொள்கைகளையும் ஜீவாதார சுதந்திரங்களையும் தியாகம் செய்யாமலே பொருளாதார முன்னேற்றத்தைக் கொணர முடியுமென்று உறுதியிட்டு கூறுகிறது.

இரண்டாவதாகக் கூறப் பெற்ற சித்தாந்தத்தில் தான் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எங்களுடைய அரசியல் பொருளாதாரத் திட்டத்தில் இதை செயலில் கொணர நாங்கள் முயலுகிறோம். இந்தச் சித்தாந்தத்தை வெற்றியடையச் செய்வதில் அமெரிக்கா மிகவும் அக்கறை கொண்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. இந்தியா, சர்வாதிகாரச் சித்தாந்தத்தைக் கைக்கொள்ளும்

நிர்ப்பந்தத்திற்கு ஆளாகும் பட்சத்தில், சுதந்திர உலகின் பரப்பு மிகவும் குறைந்துவிடும். சுதந்திர அணிகளின் பலம் குன்றிவிடும்.

ஆகையால் இந்தியாவுக்கு மட்டுமல்ல, அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, சுதந்திரத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் நமது இரு நாடுகளும் தோளோடு தோள் சேர்ந்து பரஸ்பரம் உதவி செய்து மனிதகுலப் போராட்டத்தில் ஈடுபடுவது மிகவும் முக்கியம். இந்த மனித குலப் போராட்டம் வறுமையை எதிர்த்து நடத்தும் போராட்டமேயாகும்.

# தாமஸ் ஜெபர்ஸன்

உலகில் ஜனநாயகம் தோன்றி வளர்வதற்கு மாபெரும் பணி புரிந்தவர்களில் ஒருவர் தாமஸ் ஜெபர்ஸன்.

ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்கா நாட்டு ஒற்றுமையை உருவாக்கியவர். ஆபிரகாம் லிங்கன் அவ் வொற்றுமைக்கு வந்த பேராபத்தை வென்ற பெரியார். ஆனால் ஜனநாயகத்துக்கு வழி வகுத்து, மனிதன் உரிமைகளை விளக்கி யுரைத்த பெருமை தாமஸ் ஜெபர்ஸனுடையதாகும். இவர் இத் துறையில் எடுத்துரைத்த கருத்துக்கள் அமெரிக்காவில் மட்டுமல்ல, உலகில் பல்வேறு நாடுகளிலும் தழைத்தோங்குகின்றன.

எல்லோருக்கும் உரிமையும், எல்லோருக்கும் வாய்ப்பும் உள்ள ஜனநாயகமாக விளங்க வேண்டும்; இது தான் அமெரிக்க நாட்டுப் பண்பு. இப் பண்பிற் கோர் எடுத்துக் காட்டாக விளங்கியவர் ஜெபர்ஸன். நாட்டின் "விடுதலைப் பிரகடனம்" இவர் எழுத்தேயாகும். "ஜெபர்ஸன் கருத்துக்கள் சுதந்திர சமுதாயத்தின் மூலக் கருத்துக்களாகும்" என்றார் ஆபிரகாம் லிங்கன்.

"மத சுதந்திரம் பற்றிய வெர்ஜீனியாச் சட்டம்" உலக வரலாற்றில் வேறெங்கும் காணக் கிடையாத ஒப்பற்ற சாசனம். இதனை எழுதிய பெருமையும் ஜெபர்ஸனுடையதாகும்.

## அரசியல் வாழ்க்கை

ஜெபர்ஸன் பிறப்பு 1743, ஏப்ரல் 13. இவர் கல்லூரியில் சேர்ந்தது 17வது வயதில். இவர் சட்டம் பயின்றது,

பின்னர் "விடுதலை பிரகடனத்தில்" உடனிருந்து கையொப்பமிட்ட வெர்ஜீனியா வழக்கறிஞர் ஜார்ஜ் வைத் என்பவரிடம் இவர் வழக்கறிஞரானது 24வது வயதில். சட்டமும், இலக்கியமும், தத்துவமும் அவர் கருத்துக்கு விருந்தாயின. எனினும், அரசியல் அவர் முதல் அலுவலாயிற்று. 1768ஆம் ஆண்டில் இவர் (அன்று காலனியாக இருந்த) வெர்ஜீனியாவின் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அதுவே இவர் பொது வாழ்க்கையின் தொடக்கம். "அரசாங்க அலுவலில் இருந்து கொண்டு என் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளத் தக்க எந்த வேலையிலும் ஒருநாளும் ஈடுபடேன்" என்று இவர் அன்றே உறுதிமொழி கூறினர். அதன்படியே தமது பொது வாழ்க்கைக் காலம் முழுவதும்—40 ஆண்டுகள்—வாழ்ந்தார்.

காலனிகளின் பிரதிநிதிகள் கொண்ட காண்டினன்டல் காங்கிரஸ் என்னும் ஒரு சபை, நாட்டு விடுதலைக்குத் தலைமையாக நின்று போராடியது. அதில் ஜெபர்ஸன் ஓர் உறுப்பினர். அமெரிக்கக் காலனிகளுக்குப் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் இல்லையேல், பிரிட்டனுக்கு அமெரிக்கக் காலனிகளில் வரி விதிக்கவும் உரிமை இல்லை என்றார் ஜெபர்ஸன். 1776ஆம் ஆண்டில் "விடுதலைப் பிரகடனம்" வரையும் குழுவில் இவர் சேர்த்துக் கொள்ளப்பெற்றார். இவர் "எழுத்தில் வல்லவர்" என்று பெயர் பெற்றிருந்ததால், மூல நகல் வரையும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப் பெற்றது.

விடுதலைப் பிரகடனம் அமெரிக்க நாட்டு விடுதலையை முழங்கியதோடு நின்றுவிடவில்லை. மனித சுதந்திரம் பற்றிய தத்துவம் ஒன்றும் அதன் வாயிலாக முழங்கிற்று. தனி மனிதன் சுதந்திரம் பற்றிய பொதுவான அடிப்படை

யாது என்பதை அதில் காணலாம்; அது ஜெபர்ஸன் புதிதாக உருவாக்கியதல்ல; எனினும், ஜனநாயக வாழ்க்கை முறையில் மூலக் கொள்கைகளை முதல் முதல் வகுத்துரைத்த அதிகார பூர்வமான சாசனம் இந்த விடுதலைப் பிரகடனமேயாகும்; அப் பிரகடனம் உலகம் முழுமைக்கு மாகும்; அதன் முன்னுரையின் பண்பு அத்தகையது என்று பிரெஞ்சு எழுத்தாளர் ஆண்ட்ரி மொராய்ஸ் பாராட்டினர்.

கொடுங்கோன்மைக்கு அறைகூவல் விடுக்கும் இச் சாசனம் அன்று முதல் இன்று வரை விடுதலை வேண்டுவோர்க்கெல்லாம் உள்ளொளி யூட்டுவதாய் நின்று நிலவுகிறது.

1784ஆம் ஆண்டில் பாரிசுக்கு வாணிப உடன்படிக்கைகள் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தும்படி பெஞ்சமின் பிராங்ளின், ஜான் ஆடம்ஸ் இருவரோடும் தாமஸ் ஜெபர்ஸனும் அனுப்பிவைக்கப் பெற்ருர். பிரான்ஸ், பிரஷ்யா இரு நாடுகளுடனும் ஜெபர்ஸன் தமது நாட்டின் பிரதிநிதியாக உடன்படிக்கைகள் செய்தார், அப்பொழுதுதான் பிரெஞ்சுப் புரட்சித் தலைவர்கள் இவருடன் ஆலோசனை நடத்தினர். பின்னர் இவர் அமெரிக்காவின் வெளி விவகார இலாகாக் காரியதரிசியாக நான்கு ஆண்டுகள் பணியாற்றினர்.

1796ஆம் ஆண்டில் இவர் அமெரிக்காவின் உதவி ஜனுதிபதியானர். 1800ஆம் ஆண்டில் முதன் முறையாகவும் 1804ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாகவும் ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ருர். நாட்டின் புதிய தலைநகரமாக வாஷிங்டன் அப்பொழுதுதான் உருவாயிற்று. நகர் அமைப்புக்குத் திட்டம் வகுக்

கத் துணை செய்தார் இவர். வாஷிங்டன் நகரில் பதவி ஏற்ற முதல் ஜனாதிபதியும் இவரே. ஆடம்பரமான ரதத்தில் பவனி செல்லாமல், தெருக்கள் வழியே நடந்தே சென்று பதவி ஏற்றார் ஜெபர்ஸன்.

இவர் ஜனாதிபதியாக இருந்தபோது 1803ஆம் ஆண்டில் நெப்போலியனிடமிருந்து லூசியானா என்னும் பிரதேசத்தை விலைக்கு வாங்கி அமெரிக்காவின் நிலப் பரப்பை இரு மடங்காக்கினார். நாட்டின் விடுதலைக்கு வரக்கூடிய பல பேராபத்துக்களுக்கும் வாய்ப்பில்லாமல் ஒழிந்தது. அமெரிக்காவின் ஆற்றலும் வளர்ந்தது.

"கதிரவன் என்னைப் படுக்கையில் பார்த்தறியான்" என்று கூறினார் ஜெபர்ஸன். அரசியலிலும் சமூகத் துறையிலும் அவருக்குப் பெருஞ் செல்வாக்கு இருந்தது. அவர் கடிதங்களில் பதினாறாயிரம் இன்றளவும் பாதுகாக்கப் பெற்றுள்ளன. "ஒருபொழுதும் சோம்பலாயிருக்க மாட்டேன் என உறுதிகொள். நேரத்தைச் சிறிதும் வீணாக்காதவன் நேரம் இல்லையே என்று வருந்தமாட்டான். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருந்தால் எவ்வளவோ காரியங்கள் நடந்தேறுகின்றனவே என்று வியப்பாக இருக்கும்" என்பது இவர் தம் குடும்பத்தில் இளைஞன் ஒருவனுக்கு உரைத்த அறிவுரை.

∴

"குடியரசு, பாதுகாப்புடன் இருக்க வேண்டுமானால் அனைவருக்கும் கல்வி அளிப்பது இன்றியமையாதது." அதற்காக இவர் வெர்ஜீனியாப் பல்கலைக் கழகத்தை நிறுவினார். இதற்குப் பணம் கொடுத்தார், கட்டுமான வேலையைக் கவனித்தார். பேராசிரியர்களைப் பொறுக்கியெடுத்தார்; பாடத் திட்டங்களை வகுத்தளித்தார்;

1819ஆம் ஆண்டு முதல் 1826ஆம் ஆண்டில் தமது இறுதி நாள் மட்டும் அதன் தர்மகர்த்தாக்களில் ஒருவராக இருந்தார்.

மனிதனது உரிமையிலும், சுய ஆட்சியின் நன்மையிலும் மங்காத பற்றுதலுடன் உறுதியுடனிருக்குமாறு ஜெபர்ஸன் தமது நாட்டு மக்களுக்கு இறுதியாக எழுதிய கடிதம் கூறுகின்றது. "மக்கள் மனதின் மீது ஆதிக்கொள்ளும் எவ்வகையான கொடுங்கோன்மைக்கும் தீராத பகைவனயிருப்பேன் என்று கடவுள் முன்னிலையில் சத்தியம் செய்துள்ளேன்.... மனிதனுடைய சுதந்திரமும் இன்பமுமே அறிவுக் கலைகள் யாவற்றுக்கும் முக்கிய நோக்கமாகும் என்பதை நினைவில் அழியாது வைக்க முயல்வேன்" என்பது இவர் சொல்.

# பென்குவின் பறவைகள்

தென் துருவத்திலே மட்டும் வாழும் பென்குவின்— முழுப் பெயர் அடெலி பென்குவின்—ஒரு விந்தையான பறவையாகும். "தென் துருவத்துக் கோமாளி" என்றும் இதற்குப் பெயர் உண்டு. ஆராய்ச்சி விஞ்ஞானிகள் பரிசீலனை செய்துள்ள மிகமிக விந்தையான பறவைகளில் இதுவும் ஒன்று.

**பறக்காத பறவை**

பென்குவின் இறகுள்ள பறவைதான்; ஆனால் பறக்க முடியாது. பல பென்குவின்கள் சேர்ந்தால் அது பறவை "ஈட்டம்" அன்று; பறவைக் "கூட்டம்" ஆகும். இந்தப் பறவைகள், முன்புறம் வெள்ளை நிறமும் பின்பக்கம் கறுப்பு நிறமும் கொண்டதாகத் தூய வெள்ளை 'டை'யும், நீண்டு தொங்கும் அங்கியும் அணிந்த கனவான்கள் மாதிரி தோற்றமளிக்கின்றன.

மனிதர்களைப் போலவே இந்தப் பறவைகளும் கூடி வாழும் குணம் படைத்தவை; சேர்ந்து பழகும் தன்மையுடையவை. மிகப் பலமான குடும்ப உறவுகளும் இந்த பென்குவின் பறவைகளுக்கு உண்டு. மீன்களைப் போல நீந்துகின்றன. மணிக்கு 30 மைல் வேகத்தில் சிறு கடல் பிராணிகளைப் போல் நீந்துகின்றன. வானை நோக்கி "ஆர்க் ஆர்க்" என்று கூச்சலிட்டுக் கொண்டு தாவுகின்றன.

தென்துருவ மண்டலத்தில் மட்டும் வாழும் இந்த அதிசயப் பிராணியைக் கூண்டிலடைத்துக் காப்பாற்றுவது மிகக் கடினம்.

பென்குவினைப் பிடிப்பது எளிது. ஆராய்ச்சியாளர் ஒருவர் 338 பறவைகளைப் பிடித்து லேசான அலுமினியம்

வளையம் ஒன்றை அவற்றின் கழுத்தில் மாட்டி அடையாளம் செய்தார். வேறு 1360 பறவைகளைப் பிடித்து வர்ணம் தீட்டி குறியிட்டார். ஒவ்வொன்றுக்கும் ஓர் அடையாள எண் இருந்தது. தொலை நோக்கிக் கண்ணுடி மூலம் இந்த எண்களை எளிதில் படிக்கலாம்.

இரண்டு ஆண்டுக் காலம் இந்தப் பறவைகளின் நடமாட்டத்தை ஆராய்ச்சியாளர் கவனித்து வந்ததில் பென்குவின் பறவைகளைப் பற்றி மக்களிடையே இருந்து வந்த சில தவருனக் கருத்துக்களை களைவதற்கு சாத்தியமாயிற்று. அத்துடன் சில புதிய தகவல்களும் கிடைத்தன.

## குஞ்சு பொரிக்கும் காலம்

பென்குவின் பறவைகள் உணவுக்காக மாரிக் காலத்தைக் கடலிலேயே கழிக்கின்றன என்ற உண்மையை ஆராய்ச்சியாளர் கண்டார். சிறு கடல் பிராணிகளைத் தான் பென்குவின்கள் புசிக்கின்றன. வசந்த காலத்தில் அவை முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதற்குரிய இடத்திற்கு 200 மைல் தூரம் வரைக் கூட செல்கின்றன. சில சமயங்களில் பனிக் கட்டிகள் மீது இவை 60 மைல் வரையிலும் கூட ஆடி அசைந்து நடந்து செல்ல வேண்டியிருக்கும். ஒவ்வொரு ஆண்டிலும் இந்தப் பறவைகள், முட்டையிடுவதற்கு பழைய இடத்திற்கே திரும்பி வருகின்றன. பென்குவின் பறவைகள் பெண்ணும் சரி ஆணும் சரி கற்பு நெறி தவறுவதில்லை. கடலிலிருந்து திரும்பி வருகையில் வழக்கமாகக் குஞ்சு பொரிக்கும் இடம் இன்னும் பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்தாலும் கூட, அந்த இடத்தை விட்டுப் போவதில்லை.

மூன்று வாரங்களில் இரண்டு முட்டைகளை இடுகிறது பென்குவின். ஆணும் பெண்ணும் வாரக் கணக்கில் உணவில்லாமல் இருப்பதால் அடை காக்கும் பணியை ஆணும்

பெண்ணும் மாறிமாறிச் செய்கின்றன. ஆண் இரை தேடக் கடலுக்குச் செல்கையில் பெண்ணும், பெண் இரை தேடப் போகையில் ஆணும், அடை காக்கின்றன. இரண்டு வாரத்திற்கொரு தடவை பணியை மாற்றிக் கொள்கின்றன. 35 நாள் வரை அடை காக்க வேண்டியிருக்கிறது.

குஞ்சுகளுக்கு இறக்கை முளைக்கும் வரை பெற்றோர்கள்தாம் உணவு அளித்து பராமரிக்கின்றன. தங்களுடைய குஞ்சுகளை மட்டும்தான் பெற்றோர்கள் கவனித்துக் கொள்கின்றன. எட்டு அல்லது ஒன்பது வாரம் ஆனதும் குஞ்சுகளைப் பெரிய பறவைகள் கைவிட்டு விடுகின்றன.

**ஆராய்ச்சி ஏன்?**

பென்குவின் பறவைகளைப் பற்றி ஆராய்ந்து அறிவதற்கு இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்வானேன்? நீர்ப் பறவைகளுக்கும் வேறு சில பறவைகளுக்கும், சில சமயம் மனிதனுக்கும் கூட காணப்படும் 'ஆஸ்பெர்கில் லோஸிஸ்' என்ற நோய்க்கு சிகிச்சை கண்டு பிடிப்பதில் முனைந்திருக்கிறார் ஆராய்ச்சியாளர். பென்குவினின் பறவைகள் எவ்வாறு வெப்பத்தை வெளியிடாமல் வைத்திருக்கின்றன என்பதைப் பற்றியும் ஆராய்ச்சி செய்தார். கால் வழியாக வெப்பம் குறைந்து போவதைத் தடுக்கக்கூடிய ஒப்பற்றதொரு ரத்தக் குழாய் அமைப்பு பென்குவின் பறவைக்கு இருப்பதைக் கண்டார்.

உப்புத் தண்ணீரைக் கொண்டு மட்டும் இந்தப் பறவைகளால் எப்படி உயிர் வாழ முடிகிறது என்பதையும் அவர் கண்டுபிடிக்க முயற்சி செய்கிறார். நடுங்கும் குளிரில் இவை பிழைத்திருக்கும் அதிசயம் பற்றியும் சில விவரங்களை அவர் தெரிந்து கொள்ள முயலுகிறார்.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

# கவுண்டர் & கம்பெனி
## (பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி

கிளை ஆபீஸ் & ஷோரூம்
7/69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

## கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

**நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,**

மானேஜிங் டைரக்டர்

THE

# India Leather Corporation (Private) Ltd

**Premier Exporters Of**
**E. I. Tanned Hides, Kips & Skins**

- Kips (Cow Hides)
- Cowcalf Skins
- Buffalo Hides
- Buffcalf Skins
- Goat Skins
- Sheep Skins

9, DAVIDSON STREET
G. P. O. BOX - 1516
MADRAS - 1.

தி இந்தியா லெதர் கார்ப்பொரேஷன்
(பிரைவேட்) லிமிடெட்
9, டேவிட்ஸன் தெரு.
தபால் பெட்டி—1516.
சென்னை-1

Phone: 4491
2059

Grams: "TANDRIGHT"